இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

இதழ் 298 சனி, ஆகஸ்ட் 03, 2024 18 பக்கங்கள்




# தனிவழியில் செல்ல ராஜபக்ஷக்கள் முடிவெடுத்ததன் பின்னணி என்ன?

பத்திரிகையாளர் **நிக்சன்** செவ்வி

# இரு நாட்டு மீனவர் பிரச்சினை; குட்டையில் மீன்பிடிக்கும் சீனா

அகிலன்



# ஹனியே கொல்லப்பட்டமை, போர் நிறுத்த முயற்சிகள் மேல் விழுந்த சம்மட்டி அடியாகும்

தமிழில்: ஜெயந்திரன்

## வடக்கு கிழக்கு சமஷ்டியை வலியுறுத்திய துண்டுப்பிரசுர பிரச்சார நடவடிக்கை



வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு வேண்டும் எனும் கோரிக்கையை முன்வைத்து மேற்கொள்ளப்பட்ட 100 நாள் செயல் முனைவின் இரண்டாவது வருட பூர்த்தியை முன்னிட்டு வடக்கு கிழக்கு பிரதேசம் எங்கும் சமஷ்டியை வலியுறுத்திய துண்டுப்பிரசுர பிரச்சார நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றது.

அந்த வகையில் திருகோணமலை சிவன்கோவில் பகுதி மற்றும் லிங்கநகர் சந்தி ஆகிய பகுதிகளில் துண்டு பிரசுரம் வழங்கிவைக்கப் பட்டிருந்தது.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## கேரளாவின் வயநாடு பகுதியில் நிலச்சரிவு: 300க்கும் மேற்பட்டோர் பலி

இந்திய மாநிலமான கேரளாவின் வயநாடு பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது. ஏராளமானோர் காணமல் போயுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதுவரை 9,328 பேர் மீட்கப்பட்டு, நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள் ளனர். மீட்பு பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இது வரையில் 344 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இதில் இலங்கையைச் சேர்ந்த இரு தமிழர்களும் உயிரிழந்துள்ளனர்.

கேரள மாநிலம் வயநாடு பகுதியில் பெருமழை காரணமாக



கடந்த 30-ம் திகதி அதிகாலை கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. இதன் காரணமாக, முண்டக்கை, சூரல் மலை, அட்டமலை, நூல்புழா பகுதிகள் முழுமையாக மண்ணில் புதைந்தன. பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்பு பணி தொடர்கின்றது. அத்துடன் வயநாடு பகுதியில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

## சுத்தமான குடி நீருக்காக ஏங்கும் மக்கள்

இலங்கை சனத்தொகையில் சுத்தமான குடிநீரை தொடர்ச்சியாக பெற முடியாத நிலையில் சுமார் 67 சதவீதமானவர்கள் உள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பி.பி.ஏ. வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

நாட்டின் 25 மாவட்டங்களிலுள்ள நகர்ப்புற, கிராமப்புற மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளை உள்ளடக்கிய 3,210 வீட்டுத் தொகுதிகளின் மாதிரிகளைப் பயன்படுத்தி இந்த கணக்கெடுப்பு நடத்தப் பட்டுள்ளது.

குடிநீரின் தரம் குறித்து மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்,



நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு மற்றும் யுனிசெப் ஆகியன இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டன.

அதனடிப்படையில், சுமார் 35 இலட்சம் பேர் சுத்தமான குடிநீரை தொடர்ச்சியாக பெற முடியாத நிலையில் உள்ளமை தெரியவந்துள்ளது.

## வெனிசுலாவில் பூகோள அரசியல் தேர்தல் வன்முறை முடிவுக்கு வந்தது



வெனிசுலாவில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைகள் முடிவுக்கு வந்துள்ளதுடன், நிகொலஸ் மடுரோ மூன்றாவது தடவையாக அரச தலைவராக பதவியேற்றுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை (28) ஆம் நாள் இடம் பெற்ற தேர்தலில் மடுரோ 51 விகித வாக்குகளை பெற்று வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டபோதும், அவரின் வெற்றியை

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## இஸ்ரேலை தாக்கவேண்டாம் என அமெரிக்கா வேண்டுகோள்

கடந்த புதன்கிழமை(31) அதிகாலை ஈரானில் வைத்து இஸ்ரேலினால் கொல்லப்பட்ட ஹமாஸின் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயில் கனியாவின் படுகொலைக்கு பதிலடியாக ஈரானும், அதற்கு முதல் நாள் லெபனானின் தலைநகரில் வைத்து இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்ட ஹிஸ்புல்லாவின் கட்டளை அதிகாரியின் இழப்புக்கு பதிலடியாக ஹிஸ்புல்லாக்களும் இஸ்ரேலை தாக்க தயாராகி வரும் நிலையில் இஸ்ரேலை தாக்க வேண்டாம் என அமெரிக்கா ஈரான் மற்றும் லெபனான் ஆகிய நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கட்டார் நாட்டின் வெளிவிவகார அமைச்சரை தொடர்பு கொண்ட பிளிங்டன் தமது செய்தியை ஈரான் மற்றும் ஹிஸ்புல்லாக்களிடம் தெரிவிக்குமாறு தெரிவித்துள்ளதாக அமெரிக்கா வைத்



தளமாகக் கொண்ட சி.என்.என் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த கோரிக்கையை தாம் ஈரானுக்கும் ஹிஸ்புல்லாக்களுக்கும் தெரிவிப்பதாக கட்டார் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகு மற்றும் அரச அதிகாரிகளை பயணங்களைத் தவிர்க்குமாறு இஸ்ரேலின் உள்ளக பாதுகாப்பு பிரிவு கேட்டுள்ளது. மிக முக்கிய பயணங்களை தமது அனுமதியுடன் மேற் கொள்ளுமாறு அவை மேலும்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## மலேசியா பிரதமரின் பதிவை நீக்கியது முகநூல்



கடந்த புதன்கிழமை(31) அதிகாலை ஈரானில் வைத்து இஸ்ரேலினால் கொல்லப்பட்ட ஹமாஸின் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயில் கனியாவுடன் தான் எடுத்துக்கொண்ட புகைப் படத்தை முகநூலில் மலேசிய பிரதமர் பகிர்ந்திருந்தார். எனினும் முகநூல் நிறுவனம் அதனை அகற்றியது மலேசியாவை அதிக சினங்கொள்ள வைத்துள்ளது.

எனினும் சில மணிநேரங்களின் பின்னர் முகநூல் இந்த

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## இந்தியா எமது நண்பன் இல்லை – அமெரிக்கா

இந்தியா மிகப்பெரும் பிராந்திய வல்லரசாக இருக்கின்போதும் அது அமெரிக்காவின் நண்பனாகவோ இல்லை பங்குதாரராகவோ இருக்கமுடியாது என அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சகத்தின் பிரதி செயலாளர் கேர்ட் கம்பல் கடந்த செவ்வாய்க்கிழமை(30) அமெரிக்காவின் செனட் சபையில் பேசும்போது தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும் இந்தியாவுடன் நாம் தொடர்ந்து நல்லுறவுகளை பேணுவோம். மூலோபாய ரீதியில் இந்தியா முக்கியமானது. அமெரிக்காவில் உள்ளஇந்திய புலம்பெயர் சமூகம் மிகவும் சக்தி வாய்ந்தது.

இந்தியா இறமையுள்ள நாடு என்பதால் அது சுயமாக முடிவெடுக்கலாம். அது அதன் நலனுக்கு தேவையானது. இந்தியா ஒரு போதும் அமெரிக்காவின் நட்பு நாடாக இருந்ததில்லை. அதற்காக இந்தியாவுடன் அமெரிக்கா உறவுகளை பேண பின்நிற்காது. உக்ரைன் விவகாரத்தில் இந்தியா நேரிடை



யாக ஈடுபடவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ரஸ்யாவுக்கு பயணம் மேற் கொண்டு ரஸ்ய அரச தலைவர் விளமிடீர் பூட்டீனை சந்தித்த பின்னர் அமெரிக்காவின் அதிகாரி இந்த கருத்தை தெரிவித்துள்ளார். நேட்டோவின் 75 ஆவது ஆண்டுவிழா வொசிங்டனில் இடம் பெற்ற சமயம் மோடி ரஸ்யாவுக்கு சென்றது அமெரிக்காவை அதிக சினம் கொள்ள வைத்திருந் தது.

இந்த மாதம் உக்ரைனுக்கு பயணம் மேற்கொள்ள மோடி திட்டமிட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஈழமக்களின் கொள்கையை எல்லா மட்டங்களிலும் அடையாளப்படுத்துவதற்கு பொது வேட்பாளர் அவசியமாகும்.

தமிழர்களின்உரிமைகள்தொடர்பில்பெரும்பான்மை ஆட்சியாளர்கள் எப்போதும் எதிராகவே இருந்து வருகின்றனர்.இந்நிலையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எந்த வேட்பாளருக்கு வாக்களித்தாலும் எவ்விதமான பயனும் ஏற்படப்போவதில்லை என்பது திண்ணமாகும்.இந்நிலையில் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது காலத்தின் தேவையாகும் என்று நான் கருதுகின்றேன்.எமது கொள்கையை எல்லா மட்டங்களிலும் அடையாளப்படுத்துவதற்கு இது உந்துசக்தியாக அமையும் என்று சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.இரத்தினவேல் தெரிவித்தார்.



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஈழமக்களின் நிலைப்பாடு எவ்வாறு அமைய வேண்டும் என்று கருத்து வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் சிரேஷ்ட சட்டத்தரணி இரத்தினவேல் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இதுவரைக்கும் எல்லா தேர்தல்களிலும் வழக்கமான கட்சிகளுக்கு ஈழத்தமிழர்கள் வாக்களித்துள்ளனர்.இந்நிலையில் இந்த முறையும் அவர்களுக்கு எந்தவிதமானஒருமாற்றுத்தெரிவும்காணப்படவில்லை. இத்தகைய ஒரு நிலையில் எந்தக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்? அல்லது யாருக்கு வாக்களிக்க வேண்டும்? என்பதைப்பற்றி ஒரு நிலையான ஒரு முடிவுக்கு வர முடியுயாதவர்களாக அவர்கள் காணப்படுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அனுர குமார திசாநாயக்க இவர்கள் எல்லோரும் பிரதானமான விடயங்களில் உடன்படாத நிலையினையே காண முடிகின்றது.குறிப்பாக 13 ஆவது திருத்தத்தின் அடிப் படையில் மாகாண சபைகள் முறையாக இயங்க வேண்டும் மற்றும் அதற்கான அதிகாரங்களை வழங்க வேண்டும் என்பதில் அவர்கள் உடன்பாடு இல்லாத வர்களாக காணப்படுகின்றார்கள்.இவ்வாறாக தமிழர்களின் உரிமைகள் குறித்த பல விடயங்களிலும் அவர்கள் எதிராகவே இருந்து வருகின்றமை கடந்தகால வரலாறாகும்.இவ்வாறாக தமிழர்களின் நலன்களுக்கு வலுசேர்க்காத நிலையில் ஏன் அவர்களுக்கு நாம் தொடர்ந்தும் வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பில் எமக்குள் பலமான ஒரு கேள்வி எழுகின்றது.

இதேவேளை தமிழ் கட்சிகள் பொது இணக்கப்பாடு இல்லாது தங்களுக்குள் முரண்பட்டுக் கொண்டு சுக்குநூறாக உடைந்து போயிருக்கின்றார்கள். இது ஆரோக்கியமான சகுனமல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள்.அத்தோடு தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிக்கும் முனைப்புக்களும் திரைமறைவில் இடம்பெற்று வருகின்றன.’டீல்’ பேசும் வகையில் சிலரின் முன்னெடுப்புக்களும் இடம் பெற்று வருகின்றன.இத்தகைய ‘டீல்’ பேசும் விடயங்கள் காரணமாக கடந்தகால தேர்தல்கள் திசைதிருப்பப்பட்டுள்ளமையையும் இங்கு குறிப் பிட்டாதல் வேண்டும்.இத்தகைய டீல் பேர்வழிகள் பலர் சமகாலத்திலும் களமிறக்கப்பட்டிருப்பதாகவும் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.இத்தகைய பல பின்னணிகள் காணப்படுகின்றன.

ஜேவிபி என்று சொல்லக்கூடிய மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடுகள் எப்போதும் தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே காணப்படுகின்றது.1980, 90 களில்இடம்பெற்றஅராஜகநிலைமைகள்தமிழர்களுக்கு

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## ஈழத்தமிழர் இறைமையினை மீளுறுதி செய்யும் அரசியலமைப்பும் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பும் உடன் தேவை

கடந்த வாரத்தில் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் முனைவர் சு. ஜெய்சங்கர் அவர்கள் இரகசியமாகக் கொழும்பு வந்து சிறிலங்காவின் அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் இரகசியப் பேச்சுக்களில் கலந்து கொண்டதாகத் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசநாயக்கா அவசர ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் மூலம் மக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார். மேலும் நாட்டின் விமானப்படைக்குச் சொந்தமான விமானநிலையங்களை அனைத்துலக விமானநிலையங்களாகத் தரமுயர்த்தல் என்ற திட்டத்தின் அடிப்படையில் இந்திய மேலாண்மையின் கீழ் கொண்டு வரக் கூடிய முறையில் இந்தியாவின் அனைத்துலக விசாக்களை வழங்கும் நிறுவனத்தின் வழி விசாக்கள் வழங்குவதற்கான முறைமையைக் கொண்டு வருதல் என்பதும் இந்திய ரூபாவை சிறிலங்காவுக்கும் பொதுவான நாணயமாக்கி அமெரிக்க சீன நாணயமாற்றுக்களுடன் போட்டியிடுவதும், கூடவே இந்தியாவால் நிதி முகாமைத்துவம் செய்யக் கூடிய வகையில் பத்து செயற்திட்டங்களை சிறிலங்காவின் அரசுத்தலைவர் தேர்தலுக்கு முன்பே இந்தியப்பிரதமர் நரேந்திரமோடி அவர்களின் ஆகஸ்ட் மாதச் சிறிலங்கா பாரத் கூட்டாண்மையை வலுப்படுத்தும் வருகைக்கு முன் சட்டவலுவுள்ளதாக மாற்றிச் செயற்பாடுகளை இந்தியப்பிரதமர் மூலம் தொடக்கி வைப்பதும் இந்த இரகசிய வருகைகளினதும் பேச்சுக்களினதும் நோக்கு எனவும் அநுரகுமாரா திசநாயக்கா தனது ஊடகவியலாளர் அவசர சந்திப்பில் விளக்கியுள்ளார். ஆயினும் தற்போது தேர்தலுக்குப் பின்னரே இந்தியப் பிரதமரின் வருகை இடம்பெறும் என்கின்ற செய்தி வெளியாவது இரகசியப் பேச்சுக்களின் தோல்வியை வெளிப்படுத்துகின்றன.

அதே வேளை சிறிலங்கா கடற்படையினர் மீன்பிடிப்பில் ஈடுபட்டிருந்த தமிழ் நாட்டுப் படகொன்றை தங்கள் கப்பலால் மோதி இந்திய மீனவர் ஒருவரை உயிரிழக்க வைத்தது மற்றும் ஒரு மீனவரைக் காணாமல் போகச் செய்தது தொடர்பாக டில்லியில் உள்ள சிறிலங்கா தூதுவரை அழைத்து கடுங் கண்டனத்தைத் தெரிவித்துள்ளதுடன் படைகளின் பலப்பிரயோகம் நிறுத்தப்பட வேண்டும் என்ற எச்சரிப்பும் செய்துள்ளது. கூடவே கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரும் சிறிலங்காவுடன் இது தொடர்பாகப் பேசவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவையெல்லாம் பாரத் சிறிலங்கா கூட்டாண்மைக்குள் நெருடல்கள் ஏற்பட்டுள்ளதைத் தெரியப்படுத்துகின்றன. இந்நிலையில் தாயகத்து ஈழத்தமிழர்களும் உலக நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களும் இந்தியாவுக்கு வேண்டப்பட்டவர்களாக மாறுவது இயல்பு. இதனால் உலகில் வாழும் ஈழத்தமிழர்களின் மூலதனங்களை இந்தியா வழியானதாக இலங்கையில் செயற்பட வைப்பதையும் ஈழத்தமிழர்க்கான இந்தியத் தீர்வுகளை அனைத்துலகிலும் உள்ள ஈழத்தமிழர்கள் அமைப்புக்கள் ஒன்றுபட்டு ஏற்பதற்கான திட்டமிடல்களைச் செய்யவும் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் அண்ணாமலை எதிர்வரும் வாரத்தில் இலண்டன் வரவுள்ளதாகவும் இதற்கான நெறிப்படுத்தல்களைச் செய்ய அவர் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இவை எல்லாமே இந்தியக் கூட்டாண்மை சிறிலங்காவின் அரசுத்தலைவர் தேர்தல் உட்பட அனைத்து சமுக பொருளாதார அரசியல் ஆன்மிக நிலைகளிலும் சிறிலங்காவின் எதிர்காலத்தையும் ஈழத்தமிழர்களின் எதிர்காலத்தையும் முடிவாக்கும் சத்தியாகத் தொடரும் என்பதையும் அதில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களின் அடிப்படையிலேயே ஈழத்தமிழினத்தின் எதிர்கால முடிவுகளும் அமையும் என்பதும் தெளிவாகிறது.

இவற்றைக் கருத்தில் கொண்டே ஐக்கிய நாடுகள் சபையுடன் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்தமிழர் விடயங்களில் அனுபவமுடைய மனித உரிமைகள் செயற்பாட்டாளர் திரு ச.கிருபாகரன் அவர்கள் இந்தியாவின் அனுசரணையுடன் ஆபிரிக்க நாடுகளான அல்ஜீரியா, பெனின், புருண்டி, கேமருன், ஐவோரி கோஸ்ட், எரித்திரியா, காம்பியா, கானா, மலாவி, மொரொக்கோ, சோமாலியா, தென்னாபிரிக்கா, சூடான், ஆசிய-பசுபிக் நாடுகளுடான சீனா இந்தியா, இந்தோனேசியா, யப்பான், கஜகஸ்தான், குவைத், கிர்கிஸ்தான், மலேசியா, மாலைதீவுகள், கத்தார், ஐக்கிய அரபுநாடுகள், வியட்நாம், இலத்தீன் அமெரிக்க கர்பியன் நாடுகளான அர்ஜென்டினா, பிரேசில், சிலி கோஸ்டாரிக்கா, கியூபா, டொமினிக்கன் குடியரசு, ஹோண்டுராஸ், பராகுவே, மேற்கு ஐரோப்பிய நாடுகளான பெல்ஜியம், பிரான்சு, பின்லாந்து, யேர்மனி, இலக்சம்பெர்க், நெதர்லாந்து, கிழக்கு அமெரிக்க, கிழக்கு ஐரோப்பிய நாடுகளான அல்பேனியா, பல்கேரியா, ஜார்ஜியா, லித்துவேனியா, மாண்டினீக்ரோ, ருமேனியா ஆகிய ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபை உறுப்பு நாடுகள் 48 உடனும் ஈழத்தமிழர்கள் உரையாடல்களை உருவாக்கினாலே சிறிலங்காவைக் கண்காணிக்கக் கூடிய ஒரு விசேட பிரதிநிதியை நியமித்தல், அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு சிறிலங்காவை முன்மொழிதலுக்கான ஆரம்ப வேலைகள் நடைமுறைச் சாத்தியமாகலாமென்ற மிக முக்கியமான வேண்டுகோளை ஆகஸ்ட் முதலாம் திகதி விடுத்துள்ளார்.

அத்துடன் ஈழத்தமிழர்களுடன் காலனித்துவ அரசாகத் தொடர்புடைய வரலாற்றைக் கொண்ட 1505 முதல் 1621 வரை 116 ஆண்டுகள் யாழ்ப்பாண அரசு எதிர்த்துப் போராடிய பின்னர் யாழ்ப்பாண அரசின் இறைமையைத் தனதாக்கி 1658 வரை 37 ஆண்டுகள் காலனித்து ஆட்சி செய்த போத்துக்கல், 1658 முதல் 1796 வரை 138 ஆண்டுகள் காலனித்துவ ஆட்சி செய்த நெதர்லாந்து, 1796 முதல் 1972 வரை 176 ஆண்டுகள் ஈழத்தமிழர்களின் இறைமையைத் தமதாக்கிய பிரித்தானியா ஆகிய நாடுகளுடன் அவற்றை ஈழத்தமிழரின் தனியான அரசு இருப்புக் குறித்த வரலாற்று உண்மைகளைப் பேச வைக்கக் கூடிய முறையில் தொடர்பாடல்களை உருவாக்க வேண்டுமென அவர் கூறியுள்ளமையும் காலனித்துவ நாட்டின் பரிந்துரையாலேயே கிழக்குத் திமோர் தனது தன்னாட்சியை நிறுவிக்கொண்டது என்ற அனைத்துலக உதாரணத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் போர்த்துக்கல்லுடன் அங்கு செல்வாக்குள்ள மக்களினமாக உள்ள கோவா மக்களின் உதவியுடன் தொடர்பாடல்கள் தொடங்கப்பட வேண்டுமென்ற விதந்துரையையும் வெளிப்படுத்தியுள்ளார். இவரது இந்த அறிக்கை கூட்டாண்மையாக இலங்கைத் தீவில் உள்ள இந்தியாவும் பங்காண்மைகளாக இலங்கைத் தீவில் நிலைபெற்றுவிட்ட சீன-அமெரிக்க-மேற்குலக மற்றும் ஆசிய நாடுகளும் இதே போன்று இலங்கைத் தீவில் அதன் தேசமக்களான சிங்கள தமிழ் மக்களிடை தங்கள் மேலாண்மைகள் வழி அவர்களின் எதிர்காலத்தை முடிவு செய்வார்கள் என்கிற நடைமுறை உண்மை வழி சிந்திக்க வைக்கிறது. இவை இன்று அரசியல் கூட்டாண்மைகள் பங்காண்மைகள் வழியாக மக்களின் எதிர்காலம் முடிவுசெய்யப்படுவதாக உள்ளது என்ற உலகப் பொதுமையைத் தெளிவாக்குகின்றன. இந்நிலையில் நாடுகள் மட்டுமல்ல தேசஇனங்களும் தங்களுடைய மக்கள் இறைமையை வெளிப்படுத்தும் அரசியலமைப்புக்களையும் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் பொருளாதாரக் கொள்கைத் திரட்டுக்களையும் எழுத்துருவில் கட்டமைத்தால்தான் மற்றைய தேச இனங்களுடனும் நாடுகளுடனும் அமைப்புக்களுடனும் உட்தொடர்பாடல்களை வளர்த்து தங்களுக்கான பாதுகாப்பான அமைதியான ஆட்சிக்குள்ளும் வளர்ச்சிகளுக்குள்ளும் தங்களை நிலைப்படுத்திக் கொள்ள முடியும் என்பது இலக்கின் தலையாய எண்ணமாகவுள்ளது.

அத்துடன் போராட்ட வலி சுமந்த அரகலியப் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் சிறிலங்கா அரசுத் தலைவர் தேர்தலில் மக்கள் போராட்ட முன்னணி என்ற தன்விருப்பு அரசியல் கட்சியாகப் போட்டியிடுகின்றனர். இவர்களது "மக்களின் கொள்கை" என்ற தேர்தல் கொள்கை விளக்கத் திரட்டை "தன்னாட்சி மிக்க பிரதேசங்கள், இனங்களுக்கான தன்னாட்சி உரிமை, மீளப்பெற முடியாத அதிகாரங்கள், வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மிக நீண்டகாலமாக எதிர்நோக்குகின்ற காணிப்பிரச்சினைகள், இராணுவ ஆக்கிரமிப்பு, சிங்கள மயப்படுத்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை போன்றவற்றைத் தெட்டத் தெளிவாக அடையாளம் கண்டுள்ளோம். அவற்றுக்கான தீர்வையும் முன்வைத்துள்ளோம். மக்களின் பிரச்சினை அவர்களின் தேவை அடிநாதம் என்னவென்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள் மக்களில் இருந்து வேறுபட்ட ஒரு குழுவாக அதிகாரம் மிக்க குழுவாக நிற்க ஒருபோதும் விரும்பவில்லை. நாங்கள் மக்களோடு மக்களாக நிற்கின்றோம்." என எல்லா மக்களுக்கும் நம்பிக்கை அளிக்கக் கூடியதாக வெளியிட்டுள்ளனர். இதனை வரவேற்கும் இலக்கு இவர்களுக்கும் மக்கள் என்ற நிலையில் ஈழத்தமிழர்களை வரைவிலக்கணப்படுத்துகையில் சிறுபான்மையின மக்கள், வடக்கு கிழக்கு மக்கள் என்ற கருத்தியலை வெளிப்படுத்தி தமக்கு ஈழத்தமிழர் இறைமையுள்ள தேசஇனம் என்பதில் உள்ள தெளிவின்மையை வெளிப்படுத்தியுள்ளனர். இத்தகைய விடயங்கள் உரையாடல் மூலம் தெளிவுபடுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்துகின்றது. எனவே தான் ஈழத்தமிழ்மக்கள் தங்களின் அரசியலமைப்பை வெளிநாட்டுக் கொள்கையை பொருளாதாரக் கட்டமைவுகளை எழுத்தில் வெளிப்படுத்துவது எல்லா வகையிலும் இன்றைய தேவையாக உள்ளது என்பதை இலக்கு வலியுறுத்திக் கூறவிரும்புகிறது.

**ஆசிரியர்**

# இரு நாட்டு மீனவர் பிரச்சினை; குட்டையில் மீன்பிடிக்கும் சீனா

அகிலன்

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை மீண்டும் சூடுபிடித்துள்ளது. நெடுந்தீவுக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்கும் இலங்கைக் கடற்படைக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலில் இந்திய மீனவர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்திருக்கின்றார். சில நாட்களுக்கு முன்னரும் இதேபோன்ற சம்பவம் ஒன்றில் இலங்கைக் கடற்படைச் சிப்பாய் ஒருவர் பலியானார். இந்தச் சம்பவங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான மீனவர் பிரச்சினை தொடர்ந்தும் கொதி நிலையில் இருப்பதை உணர்த்துகிறது.

அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய இந்தப் பிரச்சினை அறிக்கைகள், கண்டனங்களுடன் மட்டுமே நின்றுவிடுகின்றது. நிரந்தரமான ஒரு தீர்வைக்காண்பதற்கு இரு நாட்டு அரசியல் தலைவர்களும் துணிவதாகத் தெரியவில்லை. பிரச்சினை தொடர்வதை தமக்கான வாய்ப்பாக அவர்கள் கணக்குப் போட்டு வைத்துள்ளார்கள். இந்த நிலைமைகளைப் பயன்படுத்திக்கொண்டு வடபகுதியில் தனது ஆதரவை வளர்ப்பதற்கான உபாயத்தை சீனா வகுத்துச் செயற்படத் தொடங்கியுள்ளது.



இந்த மீனவர் பிரச்சினை இன்று நேற்று உருவான ஒன்றல்ல. இது நீண்டகாலமாகத் தொடரும் ஒரு பிரச்சினை. கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்தமையால்தான் இந்தப் பிரச்சினை மோசமடைந்ததாக இந்தியத் தரப்புக்களும், இந்தியா மீனவர்களும் சொல்வது ஏற்றுக்கொள்ளக் கூடியததல்ல. அது அரசியல் நோக்கத்துடன் முன்வைக்கப்படுகின்ற ஒரு கருத்து. கச்சதீவை இலங்கை பெற்றுக்கொண்ட அதேவேளையில், வெட்ஜ் பாங் *Wadge Bank* என்ற வளங்கள் நிறைந்த தீவுப் பகுதியை இலங்கையிடமிருந்து இந்தியா பெற்றுக்கொண்டது என்பதை இந்திய அரசியல் தலைவர்கள் வசதியாக மறந்துவிடுகின்றார்கள்.

இலங்கை மீனவர்கள் இந்தியக் கடல் எல்லைக்குள் சென்று மீன்பிடிப்பதும், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்து மீன்பிடிப்பதும் நீண்டகாலமாகவே இடம்பெற்றுவரும் ஒரு நிகழ்வுதான். கடலில் எல்லைகளைப் போடமுடியாது என்பது இதற்குக் காரணம். மீன்களுக்கும் எல்லை போடமுடியாது. மீன்களைத் தேடிவரும் மீனவர்களுக்கும் எல்லைபோட முடியாதுதான். ஆனால், இப்போது கடலில் எல்லைக்களைக் காட்டக்கூடிய நவீன கருவிகள் வந்துவிட்டது. அதனால், எல்லைகளைத் தாண்டிச் செல்வதை மீனவர்களால் தெரிந்து கொளள்ள முடியும்.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டிவந்து மீன்பிடிக்கின்றார்கள் என்பது மட்டும்தான் பிரச்சினையல்ல. எல்லைதாண்டி வரும் மீனவர்கள் பயன்படுத்தும் உபகரணங்கள்தான் பிரச்சினை. அவர்கள் பொட்டம் ரோலர் எனப்படும் அடிமடி மீன்பிடி முறையைப் பயன்படுத்துகின்றார்கள். அதனைவிட பலம்வாய்ந்த பாரிய படகுகளில் பெரும் கூட்டமாாக வருகின்றார்கள். நெடுந்தீவு, மன்னார் போன்ற பகுதிகளில் வாரத்துக்கு மூன்று அல்லது நான்கு தினங்களுக்கு அவர்களின் ஆக்கிரமிப்பைக் காணமுடியும்.

அவர்கள் வரும் தினங்களில் உள்ளூர் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்வதைத் தவிர்க்கின்றார்கள். பாரிய பலத்துடன் வரும் இந்திய மீனவர்களை தம்மால் எதிர்கொள்ள முடியாது என்பதுதான் இதற்குக் காரணம்.

வடபகுதி மீனவர்களைப் பொறுத்தவரையில் நீண்டகாலப் போரினால் அதிகளவுக்குப் பாதிக்கப்பட்டவர்களில் அவர்கள் முதன்மையானவர்கள். பல வருட காலமாக மீன்பிடிப்பதே தடை செய்யப்பட்ட நிலை இருந்தது. அதனைவிட போரினால், தமது மீன்பிடி உபகரணங்களையும் அவர்கள் இழந்திருந்தார்கள். தமது தொழிலை முன்னேற்றுவதற்கு அரசின் உதவிகள் கூட அவர்களுக்குப் பெரிதாகக் கிடைக்கவில்லை. இந்த நிலையில்தான் இப்போது அவர்கள் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பை எதிர்கொள்கின்றார்கள்.

குறைந்த பட்சம் நாளொன்றுக்கு *500* இந்தியப் படகுகளுக்கு மேல் வட கடலுக்கு வருகின்றன. இந்தியமீனவர்களினால்ஆயிரம்கிலோ கிராக்கும் கூடுதலாக மீன் பிடிக்கப்படுகின்றது. இதனால், வடக்கு மீனவர்கள் *350* மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை இழப்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே அண்மையில் தெரிவித்திருந்தார். வாரத்துக்கு மூன்று நாட்களுக்கு சமமாக *900*க்கும் மேற்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் வடக்கு கடற் பரப்பில் பிரவேசிப்பதாக தெரிவிக்கப்பட்டது. வடபகுதி மீனவர்களின் கடல்வளம் இவ்வாறு பாரியளவில் சூறையாடப்படுகின்றது.



நெடுந்தீவில் இடம்பெற்ற சம்பவத்தையடுத்து இராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார்கள். அங்கு உயிரழிழந்த தமது சகாவின் உடல் இராமேஸ்வரத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் முன்வைத்துள்ளார்கள். இந்திய – இலங்கை இராஜதந்திர மட்டத்தில் பேசப்பட்டு உடலை அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடு செய்யப்படலாம்.

அதேவேளையில், தமிழக மீனவர் உயிரிழந்தமைக்கு இந்திய அரசும் இராஜதந்திர மட்டத்தில் தமது கண்டனத்தை இலங்கைக்குத் தெரிவித்திருந்தது. அதேபோல கடந்த மாதம் இலங்கைக் கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்த போதும், இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக தமது கண்டனத்தை இந்தியாவுக்குத் தெரிவித்திருந்தது. இந்தக் கண்டனங்கள் உள்நாட்டு அரசியலில் எழக்கூடிய அழுத்தங்களைச் சமாளிப்பதற்கான உத்திகளே தவிர, இராஜதந்திர ரீதியில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தக்கூடியவையல்ல.

உண்மையில் இந்தப் பிரச்சினை தொடர்வதால் பாதிக்கப்படுவது வடபகுதி மீனவர்களும், தமிழக மீனவர்களும்தான். வடக்கு மீனவர்களின் பாதிப்புக்கள் குறித்து முன்னரே தெரிவிக்கப்பட்டது. தமிழக மீனவர்களைப் பொறுத்தவரையில், அங்கு பாரிய ரோலர்களை வைத்திருப்பவர்கள் செல்வாக்கு மிக்க அரசியல்வாதிகளாகவும், முதலாளிகளாகவுமே இருக்கின்றார்கள். அவர்களுடைய கட்டளையின் படிதான் அந்தப் படகுகள் இலங்கைக் கரைக்குள் பிரவேசிக்கின்றன. இலங்கைக் கரைகளில் அவர்களால் பிடிக்கப்படும் மீன், இறால் என்பன கொழுத்தவிலைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தமது வருமானத்துக்காக அவர்கள் அப்பாவி மீனவர்களைப் பலியாக்குகின்றார்கள்.



அதேவேளையில், இராமேஸ்வரம் பகுதியில் தமிழக மீனவர்கள் போராட்டங்களை நடத்துவதைப் போல இலங்கையில் வடபகுதி மீனவர்களும் அடிக்கடி போராட்டங்களை நடத்துவதை காணமுடிகின்றது. இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்புக்கு எதிராக மன்னாரிலும், யாழ்ப்பாணத்தில் இந்திய துணை உயர் ஸ்தானிகராலயத்தை முற்றுகையிட்டும் அவர்கள் அடிக்கடி போராடுவதைக் காணமுடிகின்றது. இரண்டு நாட்டு அரசியல்வாதிகளாலும் இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையில் பாரிய இடைவெளி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர்களை தமது தொப்புள் கொடி உறவுகள் எனக்கொண்டாடும் தமிழக தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள், தமிழக மீனவர்களின் ஆக்கிரமிப்பதால் ஈழத் தமிழர்கள் எந்தளவுக்குப் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை அறியாததது போல நடிக்கின்றார்கள். தமிழகத்தில் உள்ள வாக்குகள்தான் அவர்களுக்கு முக்கியம். இது போன்ற நிலைமைகளால்தான் இந்தப் பிரச்சினை பல வருடகாலமாக தீர்க்கப்படாத ஒன்றாக இருந்தது வருகின்றது. தமிழக மீனவர்களின் ஆக்கிரமிப்பால், பல நாட்களாக தொழிலுக்கே செல்ல முடியாத நிலையில் மன்னார், நெடுந்தீவு மீனவர்கள் உள்ளார்கள். தமிழகத் தலைவர்கள் மீதான நம்பிக்கை காணாமல் போவதற்கும், இந்திய எதிர்ப்புணர்வு வளர்வதற்கும் இவை காரணமாகின்றது.

கலங்கிப்போயுள்ள இந்தக் குட்டையில் இப்போது மீன்பிடிக்க சீன முறப்படுகின்றது. வடபகுதியில் கால் பதிக்கவும், மக்களின் மனங்களில் இடம்பிடிக்கவும் இதனைப் பயன்படுத்துவதுதான் சீனாவின் திட்டம். வடக்கு

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# தனிவழியில் செல்ல ராஜபக்ஷக்கள் முடிவெடுத்ததன் பின்னணி என்ன?



**ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டதையடுத்து கொழும்பு அரசியல் சூடுபிடித்துள்ளது. ராஜபக்ஷக்கள் ரணிலை ஆதரிப்பார்களா தனிவழியில் செல்வார்களா என்ற கேள்விக்கும் பதில் கிடைத்துள்ளது. இவை தொடர்பில் ஒருவன் செய்தித் தள பிரதம ஆசிரியரும் பத்திரிகையாளருமான அ.நிக்ஸன் அவர்கள் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

**பொது ஜன பெரமுன ஜனாதிபதி ரணிலை ஆதரிப்பதில்லை என்றும், தனியான வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கும் தீர்மானித்துள்ளது. இதற்கு காரணம் என்ன?**

இம்முறை கட்சிகள் தமது தனித்துவத்தை இழந்திருக்கின்றன என்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.க.வைச் சேர்ந்தவராக இருந்தாலும், அக்கட்சியிலோ அல்லது அக்கட்சியை மையப்படுத்திய கூட்டணியிலோ போட்டியிடும் நிலை இல்லை. இப்போது தனிநபராக நின்றுகொண்டு ஆட்களைத் திரட்டும் நடவடிக்கைதான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. சஜித் பிரேமதாச ஒரு கட்சியாக நின்றாலும், அக்கட்சியில் உள்ள பலர் ரணில் விக்கிரமசிங்கவை நேரடியாாகவும் மறைமுகமாகவும் ஆதரிக்கின்ற நிலைப்பாடுதான் காணப்படுகின்றது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் கட்சிகளைக் கடந்து தனிநபர்கள், குழுக்கள் ஆதிக்கம் செலுத்தும் நிலைமையைப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. கடந்த காலங்களில் அரசியல் கூட்டணிகள்தான் இருந்தது. இம்முறை தனிநபர்களைச் சுற்றிவருகின்ற ஒரு பண்பைப் பார்க்க முடிந்தது. ஜே.வி.பி. மட்டும் அதனுடைய கட்சி அரசியடன் நிற்கிறது. அவர்கள் கூட, ஜே.வி.பி. என்ற பெயரைப் பயன்படுத்தாமல் தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில்தான் செயற்படுகின்றார்கள். ஆக, இம்முறை தேர்தல் களம் என்பது அரசியல் கட்சிகள் என்பதைத்தாண்டி தனிநபர்களாக குழுக்களாக செயற்படும் போக்கு காணப்படுகின்றது.

இப்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவுப் போக்கு அதிகரித்திருக்கின்றது. பொது ஜன பெரமுனவிலிருந்து 95 க்கும் அதிகமான எம்.பி.க்கள் ரணிலுக்கு ஆதரவைத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆக, தனிநபர்களை சுற்றிவரும் போக்கைத்தான் அதிகமாகக் காணக் கூடியதாக இருக்கின்றது.

**பொதுஜன பெரமுனவின் இந்த முடிவு ரணில் விக்கிரமசிங்கவை எந்தளவுக்குப் பாதிப்பதாக இருக்கும்?**

பொது ஜன பெரமுனவின் ஆதரவோடு ஜனாதிபதி ஆட்சியை நடத்த வேண்டியராக இருந்தாலும், அவர்களுடைய ஆதரவுடன் ஜனாதிபதித் தேர்தலைச் சந்திப்பது அவருக்குச் சாதகமாக இருக்காது. உண்மையில் ராஜபக்ஷ குடும்பத்தினர், பொது ஜன பெரமுனவைப் பொறுத்தவரையில் அவர்களுக்கான ஆதரவு என்பது ஒரு வரையறுக்கப்பட்டதாகத்தான் இருக்கின்றது. அவர்கள் நாடாளுமன்றத்தில் உள்ள பலத்தை வைத்துக் கொண்டு தம்மைப் பலமானவர்களாகக் காட்டிக் கொண்டாலும், உண்மையில் மக்கள் மத்தியில் அவர்களுக்கான ஆதரவு இல்லை.

2022 இல் கோட்டாபயவை வெளியேற்றிய அந்த உணர்வு இன்றுவரை மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. ராஜபக்ஷக்களுக்கான ஆதரவு என்பது குறைந்த ஒரு நிலையில்தான் உள்ளது. அதனால், தனியொருவனாக நின்றுகொண்டு உதிரிகளாக ஒவ்வொவருவரையும் இணைத்துக்கொள்ளும் போக்கைத்தான் ரணில் இப்போது கையாள்கின்றார். சுயேச்சையாகப் போட்டியிடுவதென்பது ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவுத் தளத்தை அதிகரித்துள்ளது என்றுதான் சொல்ல வேண்டும்.

**தனியாகப் போட்டியிடுவது என்ற பொது ஜன பெரமுனவின் முடிவு, அந்தக் கட்சிக்கு எந்தளவுக்கு சாதகமானதாக இருக்கும்?**

பொதுஜன பெரமுன வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதாகச் சொன்னாலும், அவர்களுடைய வேட்பாளர் எந்தளவுக்கு வெற்றி பெறுவார் என்று சொல்ல முடியாது. ஏனென்றால், ராஜபக்ஷ குடும்பத்துக்குள்ளேயே முரண்பாடுகள் காணப்படுகின்றன. ராஜபக்ஷக்களுடன் நின்ற பலர் ரணிலுக்கு ஆதரவைத் தெரிவித்திருக்கின்றார்கள். இவ்வாறான ஒரு நிலைமையில் பொது ஜன பெரமுன வேட்பாளர் ஒருவரை களமிறக்கினால், எந்தளவுக்கு சாதகமாக இருக்கும் என்று சொல்ல முடியாது.

பொதுஜன பெரமுனயிலிருந்து வெளியேறிய டளஸ் அழகப்பெரும தலைமையிலான அணியும் சுயாதீனமாகத்தான் இயங்குகின்றார்கள். அவர்களும் ரணிலுக்கு ஆதரவளிக்கக்கூடிய நிலை உள்ளது. இவ்வாறான நிலையில் பொதுஜன பெரமுன தனியான வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது எந்தளவுக்கு சாதகமாக இருக்கும் என்று சொல்ல முடியாது. அவர்களுக்கான ஆதரவுத் தளம் குறையவைடைந்திருக்கின்றது.

தம்மிக்க பெரேரா பொது ஜன பெரமுனவின் விருப்பமான ஒரு நபராகக் காணப்படுகின்றார். பிரபல தொழிலதிபரான அவர் செல்வாக்குள்ள, நிதிப்பலம் உள்ள ஒருவராகக் காணப்படுகின்றார். அதனால், அவரது பணத்தை வைத்துக்கொண்டு வெற்றிவாய்பைப் பெறலாம் என்று கருதக்கூடும். ஆனால், பணம் மட்டும் எந்தளவுக்கு வெற்றிவாய்ப்பைக் கொண்டுவரும் என்று சொல்ல முடியாது. ஏனெனில் மக்கள் செல்வாக்கு பொது ஜன பெரமுனவுக்கு, ராஜபக்ஷ குடும்பத்துக்கு மிகவும் குறைவானதாகத்தான் காணப்படுகின்றது. நாடாளுமன்றத்தில் இப்போது தமக்கு இருக்கக்கூடிய பெரும்பான்மையை வைத்துக்கொண்டுதான் அவர்கள் அதிகாரங்களைச் செலுத்துகின்றார்களே தவிர, மக்களுடைய செல்வாக்கு அவர்களுக்கு மிகவும் குறைவாகத்தான் உள்ளது. அதனால், அவர்கள் வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால். அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சொல்ல முடியாது.

**தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் தமிழ் அரசியல் தரப்பில் இப்போது ஒரு பேசு பொருளாக இருக்கின்றது. தேர்தல் களத்தில் இது எந்தளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும்?**

வடக்கு, கிழக்கு மக்கள் ஒருமித்து வாக்களித்தால் அது தாக்கத்தைச் செலுத்தும். போர்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# ஈழத்தமிழர் இறைமை மீட்புப் போராட்டத்தின் அரைநூற்றாண்டு வரலாற்றின் முக்கிய கட்டங்கள்

## வரலாற்றைத் திரிபுபடுத்தும் ஈழத்தமிழ் அரசியல் வாதிகளுக்காக மீள் நினைவூட்டுகின்றோம்.

சனநாயகத்தின் அரசியல் ஆய்வாளர் **சூ.யோ. பற்றிமாகரன்**

ஈழத்தமிழர்களின் பிரித்தானிய காலனித்துவத்திடம் 1796 முதல் 1948 வரை 152 ஆண்டுகள் நேரடியாகவும் 1972 வரை 176 ஆண்டுகள் சோல்பரி அரசியலமைப்பின் 29(2) அரசியலமைப்புப் பாதுகாப்பு மூலம் பிரித்தானிய முடிக்குரிய அரசுடனான பகிர்வுடனும் இருந்து வந்த ஈழத்தமிழர்களின் இறைமையைச் சிறிமாவோ பண்டாரநயாக்காவைப் பிரதமராகக் கொண்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி இடதுசாரிக்கட்சிகள் கூட்டணி சோல்பரி அரசியலமைப்பையும் பிரித்தானிய பிரிவிக் கவுன்சிலின் கோடீஸ்வரன் வழக்குத் தீர்ப்பையும் வன்முறைப்படுத்தி, காலனித்துவ பிரித்தானிய அரசால் ஈழத்தமிழர்களின் விருப்புப் பெறப்படாது உருவாக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் பாராளுமன்ற மரபு ரீதியான வளாகத்துக்கு வெளியே நவரங்கலா என்னும் மண்டபத்தில், பாராளுமன்றம் என்ற பெயரையும் தம் விருப்புக்குச் சிறிலங்காத் தேசிய சபை என மாற்றி ஈழத்தமிழர்களின் பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றாத சிறிலங்காச் சிங்கள பௌத்த குடியரசு பிரகடனத்தின் மூலம் ஈழத்தமிழர்களை ஆளும் அரசியலமைப்புத் தகுதியை இழந்த ஆக்கிரமிப்பு அரசை 22.05.1972 இல் பிரகடனப்படுத்தினர். இதன் விளைவாக அரசற்ற தேசஇனமாக்கப்பட்ட (Nation Without State) ஈழத்தமிழர்களிடம் அவர்களின் இறைமை மக்கள் இறைமையாக வந்தடைந்தமை வரலாறு.



சிறிலங்காவின் சிங்கள பௌத்த நாடாக்கும் 1972ம் ஆண்டு அரசியலமைப்பு ஈழத்தமிழர்களால் என்றுமே ஏற்கப்பட மாட்டாது என்பதை உலகுக்கு வெளிப்படுத்த அக்காலத்து ஈழத்தமிழர்களின் அரசியல் தலைவராக விளங்கிய சா.ஜே. வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் தனது காங்கேசன்துறைப் பாராளுமன்ற உறுப்புரிமையை 22.10.1972 இல் விட்டு விலகி அந்தத் தொகுதிகான தேர்தலை ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமைக்கான அடையாளக் குடியொப்பமாக உலகுக்கு அறிவித்தார். வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இலங்கைத் தீவில் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வரும் ஈழத்தமிழர் தங்களில் நிலைகொண்டுள்ள இறைமையின் அடிப்படையில் தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தித் தங்களின் அரசியல் எதிர்காலத்தை முடிவுசெய்யும் ஈழத்தமிழர் இறைமையை மீளுறுதி செய்யும் அரசியல் போராட்டத்தை அனைத்துலகச் சட்டங்களுக்கு ஏற்ப சனநாயக வழியில் இவ் அறிவிப்பு தொடக்கியது.

இதனை அடுத்து ஈழத்தமிழர்களின் பண்பாட்டு இனஅழிப்பின் மூலம் சிங்கள பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்பு ஆட்சியை உறுதிப்படுத்தவெனத் திட்டமிட்ட சிறிலங்கா அரசாங்கம் 1974ம் ஆண்டு ஜனவரி 10 நாள் யாழ்ப்பாணத்தில் நடாத்தப் பெற்ற 4வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் தனது பண்பாட்டு இனஅழிப்பைத் தொடக்கி 11 ஈழத்தமிழர்களை இனப்படுகொலைக்கு உள்ளாக்கியது. இப்பண்பாட்டு இனஅழிப்பு ஈழத்தமிழர்களின் உயிரையும் உடமைகளையும் நாளாந்த வாழ்வையும் பாதுகாப்பதற்கான ஈழத்தமிழர் தேசிய விடுதலைப் போராட்டம் 1974 முதல் மக்கள் இறைமை நிலை கொண்டுள்ள வரலாற்றுத் தாயகத்தை மீட்டெடுக்கும் மண்மீட்புக்கான ஆயுதப் போராட்டமாகத்தேசியத்தலைவர்வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் பரிணாம வளர்ச்சி பெற வைத்தது.

காங்கேசன்துறை அடையாளக் குடியொப்ப இடைத்தேர்தலை நடத்தாது மூன்று ஆண்டுகள் சிறிலங்கா அரசாங்கம் இழுத்தடித்து 06.02. 1975இல் நடாத்திய பொழுது பெற்ற 72.55 வீதமான வாக்குகளான 25927 வாக்குகள் அளித்த 15470 பெரும்பான்மை வாக்குகளால் பெற்ற மக்கள் ஆணையைக் கொண்டு அதுவரை கால் நூற்றாண்டாக ஈழத்தமிழர் சிங்களவர் இறைமைகள் பொதுவாக இருக்கும் நிலையே ஈழத்தமிழர்களின் அடிப்படை உரிமைகளை மறுத்து அடிமைகளாகச் சிங்கள அரசுக்கள் ஈழத்தமிழர்களை நடாத்த இடமளிப்பதால் சிறிலங்காப் பாராளுமனறத்தில் இருந்து விலகித் ஈழத்தமிழர்களின் தன்னாட்சியை அமைப்பது தனது கட்சியின் செயற்பாடாக அமையுமென்ற ஈழத்தமிழர் தன்னாட்சிப் பிரகடனத்தை அனைத்துலகச் சட்டங்களுக்கு அமைய சனநாயக வழியில் சிறிலங்காப் பாராளுமன்ற அமர்வில் உலகுக்கு வெளிப்படுத்தி பாராளுமன்றத்தை விட்டு வெளியேறினார்.



இதனை அடுத்து சிறிலங்கா அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தின் கீழ் பொலிசாரைப் பயன்படுத்தியும் காடையர்களைப் பயன்படுத்தியும் மீளவும் அரசபயங்கரவாதத்தை ஈழத்தமிழர், மலையகத் தமிழர், தமிழ் பேசும் இலங்கை முஸ்லீம்கள் மேல் 1975க்கும் 1976க்குமிடை வாழ்வுக்கு இனங்காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்தி அவர்களின் அரசியல் பணிவைப் பெறும் சிங்கள பௌத்த பேரினவாதக் கொள்கையாகச் செயற்படுத்தியது. சித்திரவதைகளையும் காரணமின்றிக் கைது செய்து நூற்றுக்கு மேற்பட்டோரை விசாரணையின்றித் தடுத்து வைத்தலையும் கோயிலில் வழிபாடு செய்துவிட்டுத் திரும்பி வந்த வங்கி எழுதுவினைஞர் பரராசா மற்றும் மலையகத் தோட்டத் தொழிலாளி இலட்சுமணன் ஆகியோரைச் சுட்டுக் கொன்றும் பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த 7 முஸ்லீம்களைக் கொன்றும் வெளியில் இரண்டு முஸ்லீம்களை உயிருடன் எரித்தும் முஸ்லீம்களின் 200 வீடுகளையும் 50 கடைகளையும் அழித்தும் இந்த அரசபயங்கரவாதம் இடம்பெற்றதெனச் சச்சி பொன்னம்பலம் அவர்களால் எழுதப்பெற்று இலண்டன் தமிழர் தகவல் மையத்தால் 1983இல் வெளியிடப்பெற்ற சிறிலங்கா – தமிழர் தேசியப் பிரச்சினையும் தமிழர் விடுதலைப் போராட்டமும் என்னும் நூல் பக்கம் 185இல் பதிவாக்கியுள்ளது.




இந்த அரசியல் சூழ்நிலையிலேயே ஈழத்தமிழர் தன்னாட்சிப் பிரகடனத்தை 1976இல் ஈழத்தமிழர்களின் முக்கிய அரசியல் கட்சிகள் தமிழர் கூட்டணியாக ஒருங்கிணைந்து வட்டுக்கோட்டையில் நடாத்திய சந்திப்பில் ஏற்று அந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை பண்ணாகமத்தில் நடாத்திய தமிழர் கூட்டணி மாநாட்டில் ஈழத்தமிழர்களின் அரசியல் கொள்கையாக உலகுக்கு அறிவித்து தங்கள் கூட்டணியையும் ஈழத்தமிழர் விடுதலைக் கூட்டணியாக ஈழத்தமிழரின் விடுதலைக்காகப் போராடும் அமைப்பாகப் பெயர் மாற்றம் செய்தன.

தொடர்ந்து 1977 இல் ஈழத்தமிழர் தாயகத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலை “ஈழதேச இனம் ஏற்கனவே அவர்களிடம் நிலை கொண்டுள்ள இறைமையைப் பயன்படுத்தி ஈழதேச மக்கள் தங்களை விடுவித்துச் சுதந்திரமான, இறைமையுள்ள, மதசார்பற்ற, சோசலிச அரசை தமிழ்பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகத்தில் சனநாயக வழியிலோ அல்லது வேறு எந்த வழிகளிலோ நிலைப்படுத்துவதற்கான மக்கள்ஆணை” பெறும் குடியொப்பமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவித்தது.

இவ்விடத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் கொள்கைத் திரட்டினை மீள்பதிவு செய்ய வேண்டியது சமகாலத்தின் தேவையாகிறது.

“ தமிழ்த்தேசஇனம் தன்னுடைய தாயகத்தில் தன்னுடைய தன்னாட்சி உரிமையின் அடிப்படையில்தன்னுடைய இறைமையை நிலைநிறுத்த வேண்டும் என்னும் முடிவை எடுத்துள்ளது. இந்த முடிபைச் சிங்கள அரசாங்கத்துக்கும் உலகுக்கும் அறிவிப்பதற்கான ஒரே வழியாகத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களித்தல் உள்ளது. அளிக்கப்படும் இவ்வாக்குகளால் தெரிவாகும் தமிழ் பேசும் பிரதிநிதிகள் இலங்கைத் தேசிய சபையின் உறுப்பினர் கள் என்ற இருப்புடன் தங்களைத் தமிழீழத் தேசிய சபையினராகவும் கட்டமைத்து தமிழீழ அரசுக்கான அரசியலமைப்பை வரைந்து தமிழீழத்தின் சுதந்திரத்தை அந்த அரசியலமைப்பை அமைதி

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# இந்திய இராணுவத்தினரின் வல்வைப் படுகொலைகளின்

# 35ஆவது ஆண்டு நினைவுகள்... !

**பாகம் I**

இந்தியாவின்ஜாலியன்வாலாபாக்படுகொலை, ருவண்டாப் படுகொலைகள், வியற்நாமின் மைலாய் படுகொலைகளின் வரிசையில் 1989 இல் இந்தியப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட வல்வெட்டித்துறைப் படுகொலையும் இன்று இடம்பெற்று, இன்று 45ஆவது ஆண்டு நிறைவு பெறுகின்றது.

1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம், 3 ஆம், 4ஆம் திகதிகளில்; வல்வெட்டித் துறையில் இந்தியப் படைகளினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் ஒரு துன்பியல் நிகழ்வாகும். ஈழத்தில் தமிழர்களைக் காப்பதற்கு என்ற போர்வையில் வந்த இந்தியப் படையினர் எமது நாட்டைக் கபளீகரம் செய்து சின்னா பின்னப் படுத்தி, அமைதியற்ற ஒரு பிராந்தியமாக்கி விட்டுச் சென்றனர்..! இந்தியப் படையினர் ஈழத்திற்கு வந்த நாளில் தொடங்கி,அவர்களால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளும்,மனித உரிமை மீறல்களும் எண்ணற்றவை. அவற்றுள் சில பின்வருமாறு:

- **ஆயிரக்கணக்கான வீடுகளை உடைத்தும், எரித்தும் தரைமட்டமாக்கினார்கள்.**
- **பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஆண், பெண், குழந்தைகள், வயோதிபர்கள் சிவிலியன்களை சுட்டும், எரித்தும் துவம்சம் செய்தனர்.**
- **நூற்றுக்கணக்கான கோயில்களை இடித்துத் தரைமட்டமாக்கினார்கள்.**
- **தமிழ்ப் பள்ளிகளை எரித்தார்கள்.**
- **ஹிட்லர் கூடச் செய்யத்தயங்கிய படுகொலைகளை வைத்தியசாலையினுள்ளேயே மேற்கொண்டு வெறியாட்டம் ஆடிப் பல வைத்தியர்களையும்,தாதிகளையும்,நோயாளிகளையும் கொன்றொழித்தார்கள்.**
- **பல நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டனர்.**
- **பள்ளி மாணவர்களான ஒன்பது இளைஞர்களை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தடுத்து வைத்து அடித்தே கொன்று புதைத்தனர்.**



இந்தியப் படையினரின் படுகொலைகளின் உச்சக் கட்டமாக நிகழ்த்திய வல்வைப் படுகொலைகளின் அழிவுகளை நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்குகின்றது. 1989இல். இந்தியப்படையினர் வல்வெட்டித்துறையில் நடத்திய படுகொலைகள் இன்றும்கூடஎமது மக்களின் நெஞ்சைவிட்டு அகலாது இருக்கின்றது..!

02.08.1989 அன்று முற்பகல் 11.15 மணியளவில், ஊரிக்காடு மற்றும், பொலிகண்டி இராணுவ முகாம்களிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது தாக்குதல் தொடுத்து அவர்களை அழிக்கும் நோக்குடன் கனரக ஆயுதங்களுடன் புறப்பட்டனர். இவ்வாறு புறப்பட்ட இந்திய இராணுவத்தினருக்குத் தலைமைதாங்கியவர்களில் முக்கியமானவர்களாக, ஊரிக்காடு இராணுவ முகாம் பொறுப்பதிகாரிகளாக இருந்த மேஜர் சுதர்சன்சிங், கப்டன்கபூர் ஆகியோருடன், பொலிகண்டி இராணுவ முகாம் பொறுப் பதிகாரியாக இருந்த கப்டன் கோபாலகிருஸ்ண மேனன் ஆகியோரின் வழிகாட்டலில், பல நூற்றுக் கணக்கான சீக்கிய மற்றும் குர்க்கா இராணுவ அணியினருடன் இரு வழியாக வியூகம் அமைத்துப் புறப்பட்டனர்.



வல்வை.ந.அனந்தராஜ்

புலிகளை அழிக்கும் நோக்கில் சிவபுர வீதி வழியாகவும்,காங்கேசன்துறை வீதி வழியாகவும் முன்னேறிய சீக்கிய மற்றும் குர்க்காப் படையினரை எதிர்கொண்டு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 09 சீக்கிய சிப்பாய்கள் கொல்லப் பட்டதும், அதிர்ந்து போன இந்தியச் சிப்பாய்கள் திகைத்துப்போய் சிதறி ஓடினர். ஆனால் சில மணிநேர அமைதிக்குப் பின்னர், தமது ஆத்திரத்தை வழமைபோன்று அப்பாவிப் பொது மக்கள்மீது சரமாரியாகத் தாக்குதல்களை மேற்கொண்டனர். அவர்களின் மூர்க்கத்தனமான தாக்குதல்களில் பாடசாலைகள், கடைகள், இந்து, கிறிஸ்தவ ஆலயங் கள், மீன்பிடிப்படகுகள் என பல கோடிக்கணக்கான ரூபாய்கள் சொத்து இழப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இந்திய இராணுவத்தினரின் தாக்குதல்களில் அங்குமிங்குமாக 63 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அவ்வளவு படுகொலைகளும் ஆகஸ்ற் 2ஆம் திகதி முதல் ஆகஸ்ற் 3ஆம் திகதி வரை இந்தியப் படையினரின் சுற்றி வளைப்புத் தாக்குதல்களிலேயே கொல்லப்பட்டனர். ஆனால் இந்தச் சண்டையில் இந்திய இராணுவத்தினர் குறிப்பிட்டதுபோல், விடுதலைப் புலிகள் எவரும் கொல்லப்படவில்லை.

ஒகஸ்ட் 2 ஆம் திகதி இச்சம்பவம் நடைபெற்றதைத் தொடர்ந்து 3ஆம், 4ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறையிலும் அதைச்சூழ உள்ள பகுதிகளிலும் ஊரடங்குச் சட்டத்தினை பிரகடனப் படுத்திவிட்டு கொலை வெறியாட்டம் ஆடினர். வெளியில் இருந்து ஊடகவியலாளர்கள் உட்பட யாருமே வல்வெட்டிதுறைக்குள் நுழையவோ அல்லது அங்கிருந்து தப்பிவரவோ முடியாத அளவுக்கு அவர்களது சுற்றிவளைப்புத் தாக்குதல்கள் தொடர்ந்தது. அந்த மூன்று நாட்களும் வல்வெட்டித்துறை இருண்ட உலகத்திலேயே மூழ்கிப்போய் இருந்தது. அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்கள் வெளி உலகத்திற்குக் கொண்டுவரப்பட முடியாத அளவுக்கு எந்த ஊடகவியலாளரையும் இராணுவத்தினர் உள்ளே வர அனுமதிக்கவில்லை. இந்திய இராணுவத்தினரின் அந்த மிலேச்சத்தனமான தாக்குதல்கள் முடிந்து அந்தப் பிரதேசத்தை விட்டு இராணுவம் முகாம்களுக்குத் திரும்பியபின் வல்வெட்டித்துறைக்குச் சென்று பார்த்தவர்களால் அங்கு நடைபெற்ற கொடூரங்களை ஜீரணிக்க முடியவில்லை.



- **ஆண்,பெண், முதியோர், குழந்தைகள் உட்பட அங்குமிங்குமாக 63 பொதுமக்கள் சுட்டும், வெட்டியும், எரித்தும் கொல்லப்பட்டிருந்தனர். இதில் பலர் நிலத்தில் முகங்குப்பறப்படுக்க வைக்கப்பட்ட நிலையில் முதுகில் சுடப்பட்டிருந்தனர். மேலும் படுகாயமடைந்தவர்களில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு ஒருவாரத்தின் பின்னர் அவர்களில் 8 பொது மக்கள் மரணமடைந்தனர்.**
- **50க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்திருந்தனர்.அவர்களில் பலர் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர்.**
- **திருமணமான பெண்கள் உட்பட, வயது வேறுபாடின்றி 15 பெண்கள் கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களை விட மேலும் பல பெண்கள் தமது குடும்ப கௌரவம் கருதி தமது பாதிப்புக்களை வெளியே கூறமுடியாத அளவுக்கு மௌனமாக இருந்துள்ளனர்.**
- **123 வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டும்,234 வீடுகள் பகுதி சேதமாக்கப்பட்டும நாசமாக்கப்பட்டன.**
- **45 வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்டு தீயிடப்பட்டதுடன், 12 பாரிய மீன்பிடிப் படகுகளும், 176 மீன்பிடி வலைகளும் எரித்துச் சாம்பராக்கப்பட்டன.**
- **வல்வெட்டித்துறை சிவன் கோயில், வல்வை முத்துமாரி அம்மன் கோயில், கப்பலுடையவர் கோயில்,ஆதிகோயில், புனித செபஸ்ரியர் தேவாலயம் உட்பட பத்துக்கும் மேற்பட்ட வணக்க ஸ்தலங்கள் எரியூட்டப்பட்டன.**
- **மோட்டார்கார்கள்,மோட்டார் சைக்கிள்கள் உட்பட 62 வாகனங்கள் எரியூட்டி அழிக்கப்பட்டன.**
- **வல்வைசனசமூகநிலையம் மற்றும் பொது நூலகம், பாடசாலைகள் என்பன தீயிடப்பட்டன. பலஆயிரக்கணக்கானநூல்கள். தளபாடங்கள் கொழுத்தப்பட்டிருந்ததுடன் நூலகத்தில் இருந்த காந்தி,நேரு,நேதாஜி, இந்திராகாந்தி**

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# வறுமையும் மனித உரிமை மீறலும்

மலையக மக்கள் உரிமை மீறல்கள் பலவற்றுக்கும் உள்ளாகி வருகின்றனர். இந்நிலையானது இம்மக்களின் அபிவிருத்திக்கு தடையாக உள்ளதோடு மேலும் பல பாதக விளைவுகளுக்கும் அடித்தளமாகியுள்ளது. இந்நிலையில் இம்மக்களுக்கான உரிமைகளை உரியவாறு உறுதிப்படுத்தி அவர்களை தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தல் வேண்டும். இதனிடையே பெருந்தோட்ட மக்களுக்கு சகல உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்பதனைவலியுறுத்தி கண்டி, சமூக அபிவிருத்தி நிறுவகம் அண்மையில் மாத்தளையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடாத்தி இருந்ததும் குறிப்பிடத் தக்கதாகும்.



'உரிமைகள் மனித வாழ்வின் நிபந்தனைகள். பொதுவாக அவை இன்றி எம் மனிதனும் சிறப்பாக செயற்பட முடியாது. இந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகவே இயங்கும் அரசு, உரிமைகளைப் பேணுவதன் மூலம் மட்டுமே தனது இலக்கினை அடைந்து கொள்ள முடியும்' என்று தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றார் அறிஞர் லஸ்கி. இதே வேளை ' உண்மையான உரிமைகள் சமூகப் பொதுநலத்தின் நிபந்தனைகள். பல்வேறுபட்ட உரிமைகள் சமூகத்தின் ஒன்றுபட்ட அபிவிருத்திக்காக நமது மதிப்பீடுகளுக்கு கடமைப் பட்டன' என்கிறார் அறிஞர் ஹோபஸ். இந்த வகையில் தனிமனிதன், சமூகம், நாடு என்று எந்த நிலைகளை நோக்கிடினும் உரிமைகள் முக்கியத்துவம் பெற்று விளங்குவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

**உரிமை மழுங்கடிப்பு**

சமூகங்களின் அபிவிருத்தி என்பது உரிமைகளின் வெற்றியிலேயே பெரிதும் தங்கியுள்ளது. ஒரு சமூகத்தின் உரிமைகள் மழுங்கடிக்கப்படும்போது அச்சமூகம் வாய்ப்புகள் பலவற்றையும் இழக்க நேரிடுகின்றது. இதனால் அச்சமூகத்தின் நோக்கம் பாதிக்கப்படுவதாக வலியுறுத்தல்கள் இருந்து வருகின்றன.



இதேவேளை உரிமைகள் கையாளப் படுகின்றபோது சமூகநலன்நோக்கில் உபயோகிக்கப்படுவது அவசியமானது என்பது புத்திஜீவிகளின் கருத்தாகவுள்ளது. இந்நிலையில் உரிமைகளை சிவில் உரிமைகள், அரசியல் உரிமைகள், பொருளாதார உரிமைகள் என்று வகைப்படுத்துகின்றனர். வாழ்வதற்கான உரிமை, கல்விக்கானஉரிமை, மதவுரிமை, சிந்திப்பதற்கும், வெளிப்படுத்துவதற்கான உரிமை, ஒன்றுகூடும் உரிமை, சொத்துரிமை, சுதந்திரம், சமத்துவம் என்பன சிவில் உரிமைகளின் பாற்படும். வாக்களிக்கும் உரிமை, தேர்தல்களில் போட்டியிடும் உரிமை, பதவியேற்கும் உரிமை, மனுச் செய்யும் உரிமை என்பன அரசியல் உரிமைகளாகும். வேலைசெய்யும் உரிமை, தொழிற் சங்கம் அமைக்கும் உரிமை என்பன பொருளாதார உரிமைகளாகக் கருதப்படுகின்றன.

துரைசாமி நடராஜா

இவ்வாறாக உரிமைகள் குறித்து நாம் நோக்குகின்றபோது மலையக மக்கள் உரிமைகளை அனுபவிக்கும் நிலை தொடர்பில் எம்மால் திருப்தி கொள்ள முடியவில்லை. காலங்காலமாக இம்மக்கள் உரிமைகள் பலவற்றையும் இழந்து கண்ணீர் சிந்தும் நிலைமையே தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

ஆரம்ப காலந்தொட்டே பெருந்தோட்டத் தமிழ் மக்கள் போதுமான வருமானமின்மை, தமது தனிமனித இயலுமைகளையும் ஆற்றல்களையும் மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பின்மை, மனித உரிமைகள் மறுக்கப்படுதல், தனிமைப்படுத்தப்படுதலும், ஒதுக்கி வைக்கப் படுதலும் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்து வந்தனர்.

பெருந்தோட்டங்களோடு அவர்களைப் பிணைக்கும் வதிவிட மானிய முறையானது அவர்களிடையே தாம் ஒதுக்கி வைக்கப்பட்ட சமூகம் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது. தோட்ட சமூகத்தினை நாட்டின் தேசிய நீரோட்டத்தோடு இணைத்துக் கொள்வதற்கான சிறந்த வழி இந்த வதிவிட மானிய முறையிலிருந்து அவர்களை விடுவிப்பதேயாகும் ' என்பது பேராசிரியர் எம்.சின்னத்தம்பியின் கருத்தாக உள்ளது.



மனித உரிமைகள் மீறப்படும்போது அது மக்களிடையே உற்பத்திக் காரணிகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலை, அதனால் ஏற்படும் குறைந்தமட்ட வருமானம், கல்வியையும் சுகாதார சேவைகளையும் முறையாக பெற்றுக் கொள்ள முடியாத நிலை போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் ஏற்படுத்தி வறுமையைத் தோற்றுவிப்பதாகவும் பேராசிரியர் சின்னத்தம்பி மேலும் சுட்டிக்காட்டுகின்றார். இந்தவகையில் மலையக மக்கள் நீண்ட காலமாகவே உரிமை மீறல்கள் பலவற்றுக்கும் முகம் கொடுத்து வந்துள்ளனர்என்பது குறிப்பிடத்தக்கதாகும்

**எதிர்மறையான தாக்கம்**

தோட்டங்களின் முகாமைத்துவம் மலையகத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி குறித்து எதுவித அக்கறையும் செலுத்தாத ஒரு நிலையே காணப்பட்டது. இவர்களின் கல்வியுரிமை மீறப் பட்டது. தோட்ட முகாமையாளர்கள் தொழிலாளர் கல்வியில் அக்கறை காட்டவில்லை என்பது மாத்திரமல்லாது, தொழிலாளர்களின் பிள்ளைகள் எவ்வித எழுத்தறிவையும் பெற்றுக் கொள்ளக் கூடாது என்பதிலும் உறுதியாக இருந்தனர்.



பெருந்தோட்டக் கலாசாரத்தில் கல்வியென்பது எதிர்மறையான தாக்கத்தினை ஏற் படுத்தக்கூடியது. தொழிலாளர் கல்வியை பெற்றுக் கொண்டால் தோட்டங்களின் மனித வலு வழங்கலில் பாதிப்பு ஏற்படும். எனவே தொழிலாளர்களின் பிள்ளைகள் எவ்வித கல்வியையும் பெற்றுக்கொள்ளக் கூடாது என்பதில் தோட்ட நிர்வாகத்தினர் மிகவும் கவனமாக இருந்ததாக பேராசிரியர் தை.தனராஜ் தனது நூலொன்றில் குறிப்பிடுகின்றார்.



1948 ம் ஆண்டு இந்திய வம்சாவளியினரின் பிரசாவுரிமை மற்றும் வாக்குரிமை என்பன பறிக்கப்பட்ட நிகழ்வு இம்மக்கள் மீதான மிகப்பெரிய உரிமை மீறலாகக் கருதப்படுகின்றது. 'எவ்வித வேலையுமற்ற சிங்களவர் ஒருவர் பிரஜாவுரிமையைப் பெறுவதற்கு தகுதியுடையவரானால் வருமானம் எதுவுமற்ற ஒரு இந்தியருக்கு ஏன் இந்த உரிமை விலக்கப்பட வேண்டும்? இத்தகைய அளவுகோல் மிக மோசமான வகுப்புவாத சார்புடையது அல்லவா? வகுப்புவாதச்சார்பு கீழிருந்து வருவதில்லை. எப்போதும் மேலிருந்தே வருவது. ' என்ற கருத்துக்களும் 1948 இல் எதிரொலித்தன.

1947 ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் மலையக தேர்தல் தொகுதிகளில் இந்தியத் தமிழர்கள் அதிகளவில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக வாக்களித்திருந்தனர். இத்தேர்தலில் 07

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# அகதி என்ற சொல் எப்போது முடிவுக்கு வரும்

ஆதி மனித இனம் தனது வாழ்க்கையை பாதுகாக்க பூமிப்பந்தின் எல்லா கண்டங்களிலும் அமைந்த செழுமையான நிலப்பரப்புகளில் குடியேறத் தொடங்கியது பல்வேறு வகையான புவியியல் அமைப்பைக் கொண்ட வேறுபட்ட கால சூழ்நிலைகள் மனிதனின் அகம் மற்றும் புற வாழ்க்கையை பல்வேறு வகையில் பிரித்தது. அவை நிறங்கள் மொழிகள் கலாச்சாரங்கள் என பல்வேறு காரணிகளை உள்ளடக்கியதாக இருந்தது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடந்த இந்த பரிணாமம் மனிதனை ஒரு நிலையான இடத்தில் தங்க வைத்து தங்களுக்கு என குடும்பம், சமூகம், ஊர் அறநெறி என காரணிகளை உள்ளடக்கிய பகுதிகளில் அவர்கள் வாழ வைத்தது அவை தாய் நிலங்களாக மாறியது. முறையே இம் மனித இனம் வணிகம், நாடுகள், அதிகாரங்கள், எல்லை பரப்புகளின் விரிவாக்கங்கள்இ இறையாண்மை, தன்னுரிமை மற்றும் போர் என அடுத்த கட்ட அரசியல் பயணத்தை தொடங்கியது.

14 ஆம் நூற்றாண்டு வரை சர்வதேச வணிகம் என்பது சீனர்கள் தமிழர்கள் அரேபியர்கள் எகிப்தியர்கள் என ஆசிய வணிகர்களாலே ஆதிக்கம் செலுத்தப்பட்டு வந்தது அக் காலகட்டத்தில் உலக அளவில் அரசியல் மற்றும் வணிககாரணங்களுக்காக மக்களின் இடப்பெயர்வு என்பது குறைந்த அளவிலேயே இருந்து வந்தது. அதன் பிறகு மேற்கத்திய நாடுகளில் ஏற்பட்ட வணிக போட்டியின் காரணமாக ஆபிரிக்கா, ஆசியா,அமெரிக்கா என மிகப் பெரிய கண்டங்களில் உள்ள பகுதிகளில் மேற்கத்திய நாடுகளின் வணிக தளங்கள் உருவாகி பின்பு அவை நாடு பிடிப்பு கொள்கையாக தீவிரமடைந்தது அதன் விளைவு நிறையக் காலனித்துவ நாடுகள் உருவாகின. இச்சூழ்நிலையில் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு வணிகர்களாகவும் வேலை ஆட்களாகவும் அடிமைகளாகவும் மக்கள் புலம்பெயர்ந்தனர் அல்லது புலம்பெயரும் சூழலுக்கு தள்ளப்பட்டனர். தெற்காசிய பகுதிகளில் இருந்து ஆப்பிரிக்கா மற்றும் கிழக்காசிய பகுதிகளுக்கும் ஐரோப்பாவிலிருந்து வட மற்றும் தென் அமெரிக்கா நாடுகளுக்கும் ஆப்பிரிக்க கண்டத்தில் இருந்து அமெரிக்க நாடுகளுக்கும் மக்கள் தங்களின் தாய் நிலங்களை விட்டு புலம்பெயர்ந்தனர்.



மேற்கத்திய நாடுகளின் இத்தகைய வணிக போட்டி நாடு பிடிப்பு போட்டியாக பரிணாமமடைந்து, 18 ஆம் மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் மிகப்பெரிய போர்களை மேற்கத்திய நாடுகளில் உருவாக்கியது அதன் தொடர்ச்சி என்பது ஆசியா ஆப்பிரிக்கா அமெரிக்கா கண்டங்களில் நீண்டது பல்வேறு நாடுகளைச் சார்ந்த மக்கள் தங்களின் நாடுகளில் இருந்து உயிரை காப்பாற்றிக் கொள்ள பல்வேறு நாடுகளுக்கு புலம்பெயர ஆரம்பித்தனர் தற்கால அகதி என்னும் பதம் இவ்விடத்திலிருந்து அதிகமாக பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டது. முதல் மற்றும் இரண்டாம் உலகப்போர் அதனை உலகளவில் மிகப்பெரிய பேசுபொருளாகவும் சர்வதேச அரசியலாகவும் மாற்றியது இரண்டாம்

**சுனில்குமார்.வெ**

உலகப்போரின் முடிவு என்பது பல்வேறு புதிய நாடுகளை உருவாக்கியது, வெவ்வேறான இனக்குழுக்கள் ஒன்றிணைந்து நாடுகளாக மாறியது சில நாடுகள் ஆக்கிரமிக்கப்பட்டன, சில நாடுகள் விடுதலை ஆக்கப்பட்டன அதன் விளைவு சில நாடுகளில் தேசிய இன உரிமை மற்றும் சில நாடுகளில் கொள்கைகள் என சர்வதேச அரசியல் போக்கின் காரணிகள் பல்வேறு போர்களை உலக அளவில் வழி நடத்தியது இவைப் போர் நடந்த நாடுகளில் வாழ்ந்து வந்தமக்களின் தாய்நிலங்கள் பறிக்கப்பட்டு அகதி சமூகங்கள் உருவாக காரணமாகவும் இருந்தது. அதன் தொடர்ச்சி இன்று வரை நீண்டு கொண்டே இருக்கிறது.

யூதர்கள், பாலஸ்தீனியர்கள் என தொடங்கி இன்றுதமிழர்கள்,திபெத்தியர்கள்,ஆப்கானியர்கள், ஈரானியர்கள் சூடானியர்கள், உக்ரேனியர்கள்என பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அவர்கள் வாழ்ந்து வந்த தாய்நிலங்களையும் கலாச்சாரங்களையும் பண்பாட்டு வழக்கங்களையும் விடுத்து உயிர் பாதுகாப்பிற்காக ஓடத் தொடங்கிய மனிதர்களை தனது சக மனிதனால் உருவாக்கப்பட்ட எல்லைகளைத் கடக்கும் பொழுது சட்ட விரோத குடியேறி எனவும் அகதியெனவும் தற்கால அரசியல் முத்திரை குத்தியது.

இவ்வாறான மக்களின் நலனை பாதுகாக்கும் பொருட்டு சர்வதேச அளவில் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் உயர் ஆணையகம் போன்ற மனித உரிமை அமைப்புக்கள் அவர்களுக்கான வாழ்வியலை உறுதிப்படுத்துகிறது. ஆனால் உண்மையில் இவர்களின் பணி என்பது ஏட்டு அறிக்கையாகவே இருந்து வருகிறது. 1951ல் ஆரம்பித்த அகதிகள் நலச் சட்டங்கள் இன்றளவிலும் பல்வேறு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்படாமலேயே உள்ளது. தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக மாதக்கணக்கில் கடல்கள், மலைகள், பாலைவனங்கள், காடுகள் என பல்வேறு இயற்கை சூழல்களையும் மனிதனால் உருவாக்கப்பட்ட கொடூரமான எல்லைகளையும் தாண்டி அகதியென வேறு நாட்டிற்கு செல்லும் மக்களின் எண்ணிக்கையானது இன்று 2023ஆம் ஆண்டு சர்வதேச அளவில் ஐக்கிய நாடுகள் சபையின் தரவுகளின் படி 110 மில்லியன் மக்கள் வலுக்கட்டாயமாக இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களின் 36.4 மில்லியன் மக்கள் அகதிகளாகவும் 6.1 மில்லியன் மக்கள் தஞ்சகோரிக்கை விடுத்தவர்களாகவும், 5.3 மில்லியன் மக்கள் சர்வதேச பாதுகாப்பை கோருபவர்களாகவும் உள்ளது.

இந்த மக்களுக்கு அரசியல் ரீதியான புலம்பெயர்ந்த நாடுகளிலும் தாய் நாட்டிலும் பல்வேறு



வகையான இடர்பாடுகள் இருந்து கொண்டே தான் இருக்கிறது குறிப்பாக புலம்பெயர்ந்த நாட்டின் வாழ்வியல் சூழல், மொழி, கலாச்சாரம் பொருளாதார நிலை மதம் நிறமென பல்வேறு காரணிகள் இந்த மக்களின் வாழ்வியலில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சர்வதேச அளவில் அகதிகள் நலச் சட்டங்களை ஏற்றுக்கொண்ட நாடுகள் பலவும் இன்று அகதி மக்களை இனம், மொழி, நிறம் எனும் பல்வேறு காரணங்களை வைத்து பிரித்து ஆள்கிறது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் ஆசியாவைச் சார்ந்த அகதிகள் தங்களின் உரிமைகளைப் பெறுவது என்பது எட்டாக்கனியாக மாறி வருகிறது வெள்ளையின ஐரோப்பிய மக்களின் அகதிகோரிக்கை என்பது ஒருவகையாகவும் பிற மக்களின் அகதிகோரிக்கை என்பது வேறு வகையாகவும் கையாளப்படுவது சர்வதேச சட்டத்தின் இயலாமையைக் காட்டுகிறது.

குறிப்பாக பிரித்தானியா, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரேலியா,இஸ்வீடன் போன்ற நாடுகள் இதில் அடங்கும். இந்தியா போன்ற நாடுகளோ இந்த மக்களை ஏற்றுக் கொண்டாலும் அவர்களுக்கான தனி சட்டங்களையோ அல்லது குடியுரிமை உட்பட எந்த ஒரு அடிப்படை உரிமைகளையோ கொடுக்காமல் அவர்களை சட்டவிரோத குடியேறி என கூறி ஒரு வேற்று கிரகவாசியை போல் முகாம்கள் எனும் திறந்த சிறையில் வாழ வைக்கிறது.

இராணுவ நடவடிக்கைகள் மற்றும் போர் சூழல்களிலிருந்து வரும் அகதி மக்கள் உளவியல் ரீதியாக பல்வேறு சிக்கல்களை அனுபவித்து வருகின்றனர். குறிப்பாக தங்களுக்கு நடந்த அவலத்தை நினைத்தும் தங்களின் இழப்புகளைக் குறித்தும் அவர்கள் ஒரு மன அழுத்தத்திலேயே வாழ்ந்து வருகின்றனர்இகுடியேறிய நாடுகளில் கல்வி பெறவும் வாழ்க்கை அமைத்துக் கொள்ளவும் வேலைவாய்ப்புகளை உறுதி செய்யவும்இ இவர்கள் படும் இன்னல்கள் மேலும் அவர் களை ஒருவித உளவியல் சிக்கல்களுக்கு ஆளாக்குகிறது என்றால் அது மிகையாகாது தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு தீர்வு வேண்டி சர்வதேச சமூகத்தை இம்மக்கள் நாடும் பொழுது அவர்களுக்கு இன்னல்களை விளைவித்த நாடுகள்சர்வதேச நாடுகளிடம் இம்மக்கள் பிரிவினைவாதிகள் என்னும் முத்திரை குத்துகின்றது.

இவைகளை தாண்டி ஏதாவது ஒரு நாள் தங்களின் சொந்த நிலம் தங்களுக்கு கிடைக்காதா! அப்பொழுது அங்கு வாழ மாட்டோமா! இன்னும் ஆசை ஒருபுறமும் மறுபுறம் இவ்வளவு சிக்கல்களுக்கு மத்தியிலும் குடியேறிய நாட்டில் குடியுரிமை கிடைக்காதா? அந்த நாட்டில் தனது குடும்பத்துடன் அமைதியான ஒரு வாழ்வியலை

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# தாய்மொழிக் கல்வியும் அரசியல் உரிமை உணர்வும்!

பாகம் 7

மொழி என்பதனை தொடர்பாடலுக்கான ஊடகமாகக் கருதுவோரும் உண்டு, இன உணர்வின் அடையாளமாகக் கருதுவோரும் உண்டு, நிலத்தின், பண்பாட்டின், தேசியத்தின் அடையாளமாக உருவகப்படுத்துவோரும் உண்டு. தாய்மொழி மனிதர்களை இணைத்து பலமாக்குவதோடு, இன வழி தேசிய உணர்வினை மேலோங்கச் செய்து, தங்கள் தாயக உரிமை மீட்பு, தமது நிலத்தின் இறையாண்மை மீட்பு என இட்டுச் செல்கிறது என்பதே நாம் வரலாற்று வழியில் அறிந்துக்கொள்ளும் செய்தியாக இருக்கிறது.

வல்லாதிக்க அரசுகள் பிறர் நிலத்தினை ஆக்கிரமிக்கும்பொழுது, முதலில் அந்நில மக்களின் தாய்மொழியினை கல்வியில் இருந்து அகற்றுவர், பிறகு பேச்சு வழக்கில் இருந்து மட்டுப்படுத்துவர். எந்த இனம் தன் மொழியினை தக்க வைக்கிறதோ, அவ்வினமே அந்நிலத்தைத் தக்க வைக்கும்! இழக்கும் மொழியினம், மெல்ல மெல்ல பெருந்தேசியவாதத்திலோ ஆதிக்க அரசுகளின் கட்டுப்பாட்டில் புதைந்துவிடும் என்பதே வரலாறு. ஆக, மொழி வெறும் ஊடகம் மட்டுமல்ல, பண்பாட்டையும் இன உணர்வினையும் அதன் வழி தாயக இறையாண்மையையும் காக்கும் பேராயுதம் என்பதை அறிக!

**தாய்மொழிக் கல்வி நடைமுறைச்சிக்கல்:**

தாய்மொழிக் கல்வி இல்லாத சூழல் உள்ள நாடுகளை வரிசையிட்டால், 1) அந்நிய ஆக்கிரமிப்பில் பல நூறு ஆண்டுகள் இருந்த நாடுகள், 2) பெருந்தேசிய ஆக்கிரமிப்பில் சிக்குண்டு தவிக்கும் சிறுதேசிய இனங்கள், 3) பல்தேசிய இனங்களில் கூட்டாட்சிகளில் முறையான தன்னாட்சி இல்லாத நாடுகள், என வகைப்படுத்தலாம்.



ஆங்கிலேயர்களுக்கு அடிமையாக இருந்த இந்தியத் துணைக்கண்டம், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளும், தென் ஆப்பிரிக்கக் கண்டமும், ஸ்பெயின், போர்த்துக்கல் நாடுகளின் ஆக்கிரமிப்பில் இருந்த தென் அமெரிக்க நாடுகள் என முதலாம் வரிசைக்குள் அடங்குகிறது.

ஸ்பெயின் நாட்டினுள் இருக்கும் காத்தாலேனியா, இங்கிலாந்தின் வேல்ஷ், ஸ்காடீஷ், போர்த்துக்கல்லின் கால்சியா உள்ளிட்டவைகள் பெருந்தேசியத்திற்குள் சிக்குண்டு கிடைக்கும் சிறுதேசிய இனங்களாக தாய்மொழிக் கல்விப் பிரச்சனையை எதிர்கொள்ளும் இரண்டாம் கட்ட வரிசை நாடுகளுக்குள் அடங்குகிறது.

அந்நிய வல்லாதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்றிருப்பினும், முறையான அரசியல் அதிகாரப்பகிர்வு இல்லாத, தன்னாட்சி இழந்த தேசிய இனங்கள் வாழும் இந்தியத்துணைக் கண்டத்தில் சிக்கித்தவிக்கும் தமிழகம் உள்ளிட்டவைகள் மூன்றாம் வரிசையில் அடங்குகிறது.

இவைகளை கோர்த்து பார்க்கும் பொழுது தன்னாட்சி இழந்த, இறையாண்மை இழந்த, தாயகத்தை இழந்த தேசிய இனங்கள் மட்டுமே தாய்மொழிக் கல்வியினை இழந்துள்ளதையும் பகுத்துணர முடியும்.

இங்கிலாந்தில் ஆங்கிலமும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அவரவர் நாட்டினில் அவரவர் தாய்மொழியிலும், ஜப்பானில், கொரியாவில், சீனாவில், ருசியாவில் என எல்லா பெரும்பான்மை நாடுகளிலும் தாய்மொழிக் கல்வியில் நிலைத்து நின்றும் உலகத்தோடு ஒட்டி உறவாடி, கோலோச்சியே வாழ்கிறார்கள் என உணரலாம். யாரும் தாய்மொழிக் கல்வி இல்லாதச் சூழலில் ஆங்கிலத்தை கற்காமல் விட்டோ உலக முன்னேற்றத்தில் தடுமாற்றம் கண்டோ வாழவில்லை. மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வரிசை நாடுகளை விட எல்லா வகையிலும் செல்வாக்கு நிரம்பியவர்களே தாய்மொழிக் கல்வியினைப் பெற்றிருப்போர்.



முனைவர் விஜய் அசோகன்,
கல்வியாளர்

இந்தியத் துணைக்கண்டம் உட்பட்ட பன்மொழி பேசும் தேசிய இனங்கள், தென் அமெரிக்க கண்டத்தில் பல்தேசிய இனக்குழுக்கள் வாழும் நாடுகளில் எல்லாம் எது கல்வி என்றச் சிக்கல் உருவாவதற்கு காரணமே, "ஒரே மொழிதான் ஒரே நாட்டினை கட்டுக்கோப்பாய் வைத்திருக்கும்" என்ற ஆதிக்கப் புரிதலே. நாம் தாய்மொழிக் கல்வி வேண்டுமென்று விடாப்பிடியாக இருப்பதற்கும் பெருந்தேசியத்திற்குள் கரைந்துவிடக்கூடாது என்ற தேசிய உணர்வுதான்.

**தாய்மொழிக் கல்வியும் அரசியல் சூழலும் – நோர்வே, சுவீடன், ஃபின்லாந்தின் பூர்வக்குடி சமி மக்கள்:**

நோர்வே, சுவீடன், ஃபின்லாந்து நாடுகளின் வடக்குப் பகுதி மக்கள் சமி இன மக்கள் ஆவர். அவர்களே, இப்பகுதிகளின் பூர்வக்குடி மக்கள், அவர்கள் இனம், மொழி, பண்பாடு முற்றிலும் வேறுபாடானது. இம்மூன்று நாடுகளின் பெரும்பான்மை மொழியாக முறையே நோர்வேஜியன், சுவிடீஷ், ஃபின்னீஷ் இருக்கும் பட்சத்தில் இந்நாடுகள் பின்பற்றும் மொழியியல் மனித உரிமை சாசனப்படியும், 1949களில் ஏற்படுத்தப்பட்ட, ஐரோப்பிய ஆணையத்தின் மனித உரிமை சாசனம் இவற்றின் படி, சமி இன மக்களுக்கான தாய்மொழிக் கல்வி உரிமை மூன்று நாடுகளும் வழங்கியது.

ஐரோப்பிய மண்ணிற்குள் இடம்பெயர்ந்து குடியேறியவர்களும், பல காரணங்களால் ஐரோப்பிய மண்ணிற்கு புலம்பெயர்ந்தோரும் பேசும் மொழி சிறுபான்மை மொழி என்ற அடிப்படையில், கல்வியில் சிறுபான்மை மக்களுக்கான மனித உரிமை மற்றும் கல்வி உரிமை சாசனத்தின் படி, கல்வியில் தாய் மொழியினை மட்டும் வழங்க முடியும், ஆனால், சமி போன்ற பூர்வக்குடிக்கள் வாழும் சூழலில் கல்வி உரிமை அவர்களின் அரசியல் உரிமைகளோடும், அம்மக்களின் இறையாண்மைஉள்ளிட்டவைகளோடும்தொடர்புடையதாக ஆகிறது. நோர்டிக் நாடுகள் கல்வியியல் உரிமையினை அரசியல் தன்னாட்சி உரிமை வழியாகவே நிலைநாட்டியுள்ளது எனலாம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கல்வி உரிமை சாசனம் தொடர்பாகவும் ஐரோப்பிய நாடுகளின் நடைமுறை தாய்மொழிக் கல்வித் தொடர்பாகவும் விரிவாகக் காண தாய்மொழிக் கல்வியும் பன்மொழிக் கல்வியும் – ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐநாவின் வழிகாட்டல்கள்!

**தாய்மொழிக் கல்வியும் அரசியல் சூழலும் – நோர்டிக் உதாரணங்கள்:**

நோர்டிக் நாடுகள் (நோர்வே, சுவீடன், டென்மார்க், ஃபின்லாந்து, ஐஸ்லாந்து) ஒவ்வொன்றும் தாய்மொழிக் கல்வியில் உறுதியாக இருப்பதற்கும் அவரவர் அரசியல் இறையாண்மைக்கும் தொடர்புண்டெனக் கருதுகிறேன். டென்மார்க் நாட்டின் டேனீஷ் மொழிக்கும், நோர்வே நாட்டின் நோர்வேஜிய மொழிக்கும், சுவீடன் நாட்டின் சுவிடீஷ் மொழிக்கும் மிக நெருங்கிய ஒற்றுமை உண்டு. ஒரு மொழி தெரிந்தால், மற்ற இரண்டு மொழிகளை எளிதாக புரிந்து, பேசவும், படிக்கவும் முடியும்.



400 வருடங்களாக டென்மார்க் நாட்டின் அரசியல் அதிகாரத்தின் கீழ் இருந்தபடியால் (தொடர்ந்து, 1813இல் இருந்து 100 வருடங்களாக சுவீடன் நாட்டின் அரசக் கட்டுப்பாட்டில் தனித்த அரசாகவும்) நோர்வே இருந்தபடியால், அவர்களின் மொழியினை இழந்துவிடும் நிலைக்குச் சென்றிருந்தனர். மொழிகளே, இம்மூன்று நாட்டின் இறையாண்மைக்கும் தனித்த அரசுக்கும் உகந்த வடிவத்தினை வழங்கும் பேராயுதமாக இருப்பதால், அவரவர் மொழியினை தக்க வைப்பதிலும், இழந்ததை மீட்பதிலும் தான் தனித்த நில, மக்கள் வழி இறையாண்மையையும் 'தேசம்' என்ற அளவுகோலையும் பெற்று தனியாட்சி பெற முடியும், இல்லையேல், ஒன்றோடு ஒன்று கரைந்து விடும் என்பதாலும், அவரவர் தாய் மொழியினை வாழ்வியல், பண்பாட்டு, கல்வி, வேலை, சமூக உறவாடல் என அனைத்திலும் தீர்க்கமாக கடைப்பிடிக்கிறார்களோ என்ற கோணத்தையும் புறந்தள்ளிவிட முடியாது.

**தாய்மொழிக் கல்வியும் அரசியல் சூழலும் – ஐரோப்பிய உதாரணங்கள்:**

ஐரோப்பிய நாடுகள் பெரும்பாலும் மொழிகளின் தொடர்பு இருப்பதால், பிற காரணிகளைப் போல, 'மொழிகளும்' நிலப்பரப்பின் இறையாண்மையைத் தீர்மானிக்கும் கருவியாகிறது எனலாம்.

அதேபோல, இன்னொரு உதாரணமாக

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# இஸ்ரேல் மேற்கொள்ளும் தொடர் படுகொலைகளின் விளைவுகள் என்ன?

வேல்ஸில் இருந்து அருஸ்

பாலஸ்த்தீன இஸ்ரேல் போர் நாளுக்கு நாள் மோசமாகி வருகின்றது. கடந்த வாரம் இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லாக்கள் மேற்கொண்ட ஏவுகணைத்தாக்குதலில் 12 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டு பலர் காயமடைந்திருந்தனர்.



இந்த தாக்குதலுக்கு பழிவாங்குவதற்காக லெபனான் மீது பெருமெடுப்பிலான தாக்குதல் ஒன்றை இஸ்ரேல் நிகழ்த்தலாம் என எதிர்பார்க்கப்பட்ட போதும் இஸ்ரேலின் எப்-35 ரக தாக்குதல் விமானங்கள் லெபனான் மீது மேற்கொண்ட தாக்குதலில் ஹிஸ்புல்லாக்களின் பிராந்திய தளபதிகளில் ஒருவரான பேட் சுஹிர் கொல்லப்பட்டிருந்தார். இந்த தாக்குதல் இடம்பெற்ற 24 மணி நேரத்திற்குள் ஈரானில் வைத்து ஹமாஸ் அமைப்பின் அரசியல் பரிவின் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டுள்ளார்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்குமான போர் நிறுத்தம் மற்றும் கைதிகள் பரிமாற்றம் தொடர்பில் தொடர் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த ஹனியே கொல்லப்பட்டது என்பது அமைதிக்கான முயற்சிகளை சீர்குலைத்து போரை மேலும் விரிவாக்கம்பெறவைக்கும்என்றகருத்துக்களையே தற்போது உருவாக்கியுள்ளது. அமைதி முயற்சியில் நடுவராக செயற்பட்ட ஒருவரை ஒரு தரப்பு படுகொலை செய்யும் போது அமைதி எவ்வாறு சாத்தியமாகும் என கேள்வி எழுப்பியுள்ளார் கட்டாரின் வெளிவிவகார அமைச்சர்.

ஈரானின் புதிய அதிபர் மசூட் பெஸஸ்கியானின் பதவியேற்பு விழாவில் செவ்வாய்க்கிழமை(30) கலந்துகொண்டுவிட்டு ஈரானின் தலைநகர் தெஹிரானின் வடக்கு பகுதியில் உள்ள அரச விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்த சமயம் ஏவுகணைத் தாக்குதல் மூலம் கொல்லப்பட்டுள்ளார். கட்டாரின் டோகாவில் தங்கியிருந்த கனியா அங்கிருந்தே ஈரான் சென்றிருந்தார்.

அவரின் படுக்கை அறையினை அதிகாலை 2 மணியளவில் ஏவுகணை துல்லியமாகத் தாக்கியதாகவும், இந்த சம்பவத்தில் அவரும் அவரின் மெய்பாதுகாப்பாளரும் கொல்லப்பட்டதாகவும் ஈரானின் புரட்சிகர இராணுவம் தெரிவித்தள்ளது.



ஆளில்லாத தாக்குதல் விமானத்தின் மூலம் ஏவுகணை ஏவப்பட்டுள்ளதாக ஈரானின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஒரே ஒரு வெடிப்பதிர்வு கேட்டதாக உள்ளூர் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சம்பவம் குறித்து சமூகவலைத்தளங்களில் கூட அதிக செய்திகள் பகிரப்படவில்லை.

இஸ்லாமிக் ஜிகாத் அமைப்பின் பொதுச் செயலாளர் சியாட் அல் நகலாவும் அவரின் அணியினரும் கனியாவின் கட்டிடத்திற்கு அருகில் உள்ள கட்டிடத்தில் தங்கியிருந்தபோதும் அவர்கள் இந்த தாக்குதலில் இருந்து தப்பியுள்ளனர்.

இந்த சம்பவம் என்பது ஈரானின் பாதுகாப்பு தொடர்பில் அதிக கேள்விகளை எழுப்பியுள்ளதுடன், ஈரான் தனது நாட்டுக்குள் நிகழ்ந்த தாக்குதலுக்கு பதிலடியை கொடுக்கலாம் என்ற எதிர்பார்ப்புக்களையும் தோற்றுவித்துள்ளது. தனது நாட்டுக்குள் இடம்பெற்ற இந்த தாக்குதல் குறித்து ஈரான் ஐ.நாவின் பாதுகாப்புச் சபையில் முறையிட்டுள்ளது.அதேசமயம் தனது சிறப்பு படைப்பிரிவான காட் படைப்பிரிவின் முக்கிய அதிகாரிகளுடன் அவசரமான பாதுகாப்பு மாநாட்டையும் நடத்தியுள்ளது.

இந்த கோழைத்தனமான கொலை குறித்து இஸ்ரேல் கவலைப்படும் நிலையை ஏற்படுத்துவேன் என தெரிவித்துள்ள ஈரானின் ஜனாதிபதி மசூத் பெசெஸ்கியன் ஈரான் தனது ஆட்புல ஒருமைப்பாடு,கௌரவம் ஆகியவற்றை பாதுகாக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் தலைவரின் கொலைக்கு பழி வாங்குவது ஈரானின் கடமை என ஈரானின் ஆன்மீக தலைவர் ஆயத்தொல்லா அலி கமேனி தெரிவித்துள்ளார்.



ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டுள்ளமை மத்திய கிழக்கை முழுமையான ஒரு யுத்தத்தை நோக்கி நகர்த்தியுள் ளது என ஜோர்ஜ்டவுன் பல்கலைகழகத் தின் மத்திய கிழக்கு விவகாரங்களிற்கான பேராசிரியர் நடெர் ஹசேமி குறிப்பிட்டுள்ளார்.

ஹமாஸ் தலைவரின் படுகொலை முன்னர் ஒருபோதும் இல்லாத அளவிற்கு மத்திய கிழக்கை முழுமையான யுத்தத்தை நோக்கி நகர்த்தியுள்ளது என அவர்தெரிவித்துள்ளார்.

அதேசமயம் இந்த தாக்குதல் குறித்து தமது அமைச்சர்கள் யாரும் கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடாது என்ற உத்தரவை இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத் தனியாகு பிறப்பித்துள்ளார். மேலும் இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்பதால் இஸ்ரேலின் சில பகுதிகளில் வான்போக்குவரத்திற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் குறித்து தமக்கு அதிக தகவல்கள் கிடைக்கவில்லை என தெரிவித்துள்ளது அமெரிக்கா. அதே சமயம் இஸ்ரேல் மீது தாக்குதல் இடம்பெற்றால் அமெரிக்கா உதவிக்கு செல்லும் என அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் லொயிட் ஒஸ்ரின் தெரிவித்துள்ளார்.



இந்த தாக்குதலுக்கான உரிமையை இஸ்ரேல் கோராதுவிட்டாலும், இதனை இஸ்ரேல் தான் மேற்கொண்டது என ஈரான் மற்றும் ஹமாஸ் தெரிவித்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இஸ்ரேல்- பாலஸ்தீனப் போர் ஆரம்பமாகிய பின்னர் கொல்லப்பட்ட ஹமாஸின் இரண்டாவது அரசியல் பிரிவுத் தலைவர் இவராவார்.

கடந்த ஜனவரி மாதம் லெபனானில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் ஹமாஸின் அரசியல் பிரிவின் நான்காவது நிலைத் தலைவரான சாலே அல் அருhரி கொல்லப்பட்டிருந்தார். அந்த தாக்குதலின் பின்னர் பேசிய இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகு ஹமாஸின் எல்லாத் தலைவர்களும் இவ்வாறு கொல்லப்படுவார்கள் என தெரிவித்திருந்தார்.

இந்த தாக்குதல் குறித்து கருத்து தெரிவித்துள்ள ரஸ்யா இந்த அரசியல் படுகொலையை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ளது. கட்டார் துருக்கி, பாகிஸ்தான், சீனா ஜோர்டான் உட்பட பல நாடுகள் தமது கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

இந்த தாக்குதல் என்பது மத்தியகிழக்கில் அமைதி ஏற்படுவதை பாதிப்பதுடன் போர் மேலும் விரிவாக்கம் பெறவே வழிவகுக்கும் என பல நாடுகள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளன. அமெரிக்க ஊடகமான சிஎன்என்னும் அதனைத் தான் தெரிவித்துள்ளது.



அதேசமயம், ஹமாஸின் நடவடிக்கைகளை இந்த தாக்குதல் பாதிக்காது என இஸ்ரேலின் பாதுகாப்புச் சபையின் முன்னாள் தலைவர் கொய்ரா எய்லான்ட் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன மற்றும் லெபனான் அமைப்புக்களுக்கு தலைவர்களை இழப்பது ஒன்றும் புதிய விடயங்கள் அல்ல. 1992 ஆம் ஆண்டு ஹிஸ்புல்லா அமைப்பின் நிறுவுனரும் தலைவருமான சயித் அபாஸ் முசாவியையும் அவரின் குடும்பத்தினரையும் இஸ்ரேலின் மொசாட் அமைப்பு படுகொலை செய்திருந்தது. ஆனாலும் அதன் பின்னர் பதவியேற்றிருந்த தற்போதைய தலைவர்சயிட் ஹசான் நஸ்ரல்லா அந்த அமைப்பை மேலும் வலுவான நிலைக்கு உயர்த்தியிருந்தார்.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# ஹனியே கொல்லப்பட்டமை, போர் நிறுத்த முயற்சிகள் மேல் விழுந்த சம்மட்டி அடியாகும்

இஸ்ரேல் தனது எதிரிகள் மீது இரண்டு மிகப் பாரிய தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. ஹமாசின் அரசியல் தலைவரான இஸ்மாயில் ஹனியேயை தாங்கள் கொன்றதாக இஸ்ரேல் இன்னும் உரிமை கோரவில்லை. அவரைக் கொல்வதற்கு இஸ்ரேலைத் தவிர வேறு யாருக்கும் எந்தவித அவசியமும் இருப்பதாகத் தெரியவில்லை. ஹிஸ்பொல்லாவின் கட்டளை அதிகாரியான வுஆட் ஷ_க்கரைப் பொறுத்தவரையில், புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் பெய்ரூத்தில்மேற்கொள்ளப்பட்டகொலைத்தாக்குதல் அது என்று இஸ்ரேல் அறிவித்திருக்கிறது.



1948ம் ஆண்டு சுதந்திரம் பெற்றதன் பின்னர், இஸ்ரேலில் ஒரு நாளில் மேற்கொள்ளப்பட்ட ஆகப்பெரிய தாக்குதல் என்றால், அது ஒக்ரோபர் 7ம் திகதித் தாக்குதல் ஆகவே இருக்கும். அந்தத் தாக்குதலுக்குப் பின்னர், இஸ்ரேலைப் பொறுத்தவரையில் ஹமாசின் உயர்மட்டத் தலைவர்கள் அனைவருமே அதன் இலக்காக மாறியிருக்கின்றனர்.

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கோலான் சிகரத்தில், 12 சிறுவர்களும் இளையோரும் கொல்லப்பட்ட றொக்கெட் தாக்குதலுக்குப் பொறுப்பான மூத்த கட்டளை அதிகாரியான வுவாட் ஷ_க்கரை தாம் கொன்றதாக இஸ்ரேல் உரிமை கோரியிருக்கிறது.



பெய்ரூத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில், வுவாட் கொல்லப்பட்டதாக, ஹிஸ்பொல்லா உறுதிப்படுத்தியிருக்கிறது. ஆனால் கோலான் சிகரத் தாக்குதலை தாங்கள் மேற்கொள்ளவில்லை என ஹிஸ்பொல்லா மறுத்திருக்கிறது.

ஒக்ரோபர் 7ம் திகதித் தாக்குதலுக்குப் பின்னர், 'மத்திய கிழக்கில் போர் ஏற்படலாம் என்ற அச்சம்' மீண்டும் ஒரு தடவை ஏற்பட்டிருக்கிறது. இதிலே புரிந்துகொள்ள முடியாத விடயம் என்னவென்றால் போரைத் தொடங்க யாருக்கும் விருப்பமில்லை. ஆனால் அப்படி ஒரு போர் ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு அவர்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

ஹிஸ்பொல்லா மீது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதலை மேற்கொள்ளுமாறு அமெரிக்கா இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது. ஹிஸ்பொல்லாவைத் தாக்க வேண்டும். ஆனால் பரந்த அளிவிலான ஒரு போருக்கு இட்டுச்செல்லும் அளவுக்கு அந்தத் தாக்குதல் பாரிய தாக்குதலாக அமையக்கூடாது என்று இஸ்ரேலை அமெரிக்கா எச்சரித்து வருகிறது.

ஆனால்தற்போதுமேற்கொள்ளப்பட்டுள்ள இரு தாக்குதல்களும் மிகவும் பெரிய இலக்குகளாகும்.



தம்மீது பாரதூரமான பழிவாங்கும் நடவடிக்கைக்கு வித்திடாத ஒரு தாக்குதலையே ஹிஸ்பொல்லா மீது மேற்கொள்ளுமாறு இஸ்ரேல் மீது அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வந்திருக்கிறது. ஆனால் பெய்ரூத்தின் தென் பகுதியில் அமைந்திருக்கின்ற தமது பலமான கோட்டை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு ஏற்றதாக, ஒரு பாரிய தாக்குதலை ரெல் அவிவ் மீது தொடுக்க, ஹிஸ்பொல்லாவின் தலைவரான ஹஸன் நஸ்றல்லா முடிவுசெய்யும் சாத்தியக்கூறு இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தமது பாதுகாவலில், தெஹ்றானில் இருந்த பாலத்தீனத் தலைவர் கொல்லப்பட்டதை, தமக்குரிய பெரிய அவமானமாக ஈரான் கருதும் என்று இஸ்ரேல் கணித்திருக்க வாய்ப்பில்லை.

ஈரானிய அதிபரைச் சந்தித்த சில கணங்களில் ஹனியேயைக் கொன்ற நிகழ்வைப் பார்க்கும் போது, இவ்விடயத்தில் இஸ்ரேலின் ஆற்றலை அளவிடக்கூடியதாக இருக்கிறது.

கடந்த ஏப்பிரல் மாதம் இஸ்ரேலின் மீது நூற்றுக்கணக்கான ஏவுகணைகளை ஏவி, ஆளில்லா விமானங்களினால் தாக்குதலைத் தொடுத்த பின்னர், தம்மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை மேற்கொள்ளாது என்றே ஈரான் இஸ்லாமிய குடியரசு நம்பியிருந்தது. அந்தத் தாக்குதலால் எந்தவித பயனும் இல்லை என்பது தற்போது நிரூபணமாயிருக்கிறது. டமஸ்கஸ்ஸில் அமைந்துள்ள ஈரானிய தூதரகத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டு, இரண்டு ஜெனரல்களைக் கொன்றதற்கான பழிவாங்கும் நடவடிக்கையாக றொக்கெட் தாக்குதலை இஸ்ரேல் மீது ஹிஸ்பொல்லா மேற்கொண்டிருந்தது.

தமிழில்: ஜெயந்திரன்

ஈரான் பக்கத்திலிருந்து பழிவாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனை ஹிஸ்பொல்லாவோ அன்றேல் ஈரானின் வேறு ஏதாவது நண்பர்களோ மேற்கொள்ளலாம். மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு அமெரிக்காவும் பொறுப்பேற்க வேண்டும் என்றும், ஈராக்கிலுள்ள ஈரான் ஆதரவு தீவிரவாதிகள் தெரிவித்திருக்கிறார்கள். செங்கடலைப் பொறுத்தவரையில் யேமனிலிருந்து ஹத்திப் போராளிகள் தமது தாக்குதல்களை மேலும் இரட்டிப்பாக்கலாம்.

காஸாவில, ஹமாசின் மீது பல மாதங்களாக இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல்களுக்குப் பின்னர், ஹமாஸ் மேற்கொள்ளக்கூடிய தாக்குதல்களுக்கும் ஒரு வரையறை இருக்கிறது. ஆனால் தம்மால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மேற்குக் கரையிலோ, அல்லது இஸ்ரேலுக்குள்ளேயோ தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் என்ற வகையில் இஸ்ரேல் உச்சக்கட்ட விழிப்புநிலையில் இருக்கிறது.



உண்மையில் மத்திய கிழக்கில் ஏற்கனவே ஒரு பிரதேச ரீதியிலான போர் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கிறது. ஆனால் அந்தப் போர் இன்னும் மோசமான ஒரு நிலையை எட்டலாம்.

அப்படியிருப்பினும், உலகின் மிகவும் கொந்தளிப்பான ஒரு பிரதேசத்தில், தெளிவான மற்றும் ஆபத்தான நிலைமைகளை உள்வாங்கி, எதிர்காலத்தில் நிகழக்கூடிய நிலைமைகளை பல்வேறு விதமான காட்சிகளாக உருவமைக்க முடிந்தால் கூட, இவ்வாறான கொலைகளும், பழிவாங்கும் நடவடிக்கைகளும், ஒரு முழு அளவிலான யுத்தத்தைத் தோற்றுவிக்கும் என்று கூறிவிட முடியாது.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# இஸ்மாயில் ஹனியே படுகொலையும் மத்தியகிழக்கை மீண்டும் மையம் கொள்ளும் உலக அரசியலும்

பாகம் I

இஸ்ரேல் இராணுவமும் அதன் வல்லமை பொருந்திய மொசாட்டும் (Mossad) இதற்கு முன்னரும் பல நுட்பமான தாக்குதல்கள் மூலம் - தமது எதிரிகள் எனக்கருதிய - மிகவும் பாதுகாக்கப்பட்ட முக்கிய நபர்கள் மீது இலக்கு வைத்து ஹொலிவூட் திரைப்படப்பாணியில் திறமையானமுறையில் அழித்துவந்துள்ளன. இதன் மூலம் இஸ்ரேல் என்பது வெல்லப்படமுடியாத ஆபத்தான நவீன இராணுவ குட்டி வல்லரசு என்ற பிம்பத்தை கட்டிஎழுப்புவதில் இதுவரை இஸ்ரேல் வெற்றி பெற்றுள்ளது

### இஸ்ரேலின் சாகசத் தாக்குதல்கள்

07.1956 ம் திகதி காசாவில் இயங்கிய எகிப்தின் உளவுத்துறை தளபதி முஸ்தபா ஹபாஸிடம் (Mustafa Hafaz) சிறு கண்ணிவெடி பொருத்தப்பட்ட புத்தகம் ஒன்றை, ஓர் இரட்டை முகவர் மூலம் விநியோகித்து, அவரைக் கொன்றது முதல் ஆரம்பமான இத்தகைய திட்டமிட்ட சாகச தாக்குதல்கள் 2024 ஜூலை 31 இஸ்மாயில் ஹனியே இலக்கு வைக்கப்படும் வரை மொத்தம் 199 இடம்பெற்றுள்ளதாக யூத இணையதளம் ஒன்று பதிவிட்டுள்ளது. (பார்க்க: https://www.jewishvirtuallibrary.org/israeli-targeted-killings-of-terrorists). உண்மையில் இத்தொகை இதனை விட அதிகமாகவே இருக்கும். இதில் ஈரானில் அடுத்தடுத்து மர்மானமுறையில் கொல்லப்பட்ட விஞ்ஞானிகளின் தொகை அடங்கவில்லை. இதுவரை தமது நிருபர்கள் 164 பேர் உண்மை செய்திகளை வெளியிட்டதற்காக இலக்குவைத்து கொல்லப்பட்டிருக்கிறார்கள் என அல்ஜசீரா அறிவித்து ஏன் அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்ற விபரத்தையும் வெளியிட்டிருந்தது. இப்படு கொலைகளும் அப்பட்டியலில் அடங்கவில்லை.



### இஸ்மாயில் ஹனியே மீதான தாக்குதலின் சிறப்பம்சம்

எனினும் இவற்றுக்கெல்லாம் இல்லாத முக்கியத்துவம் இஸ்மாயில் ஹனியே மீதான தாக்குதலுக்கு உண்டு. ஏனெனில் தற்போது மத்தியகிழக்கின் புதிய இராணுவ வல்லரசாக வளர்ந்து வரும் ஈரான் தலைநகரில், அந்நாட்டில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜனாதிபதியின் பதவியேற்பு விழாவில் கலந்துகொள்வதற்காக, அரசவிருந்தினராக இராஜதந்திர கடவுசீட்டுடன் வந்த இஸ்மாயில் ஹனியே சாதரண ஒருவர் அல்ல. இன்றைய உலகின் மிக நவீன இராணுவ குட்டி வல்லரசான இஸ்ரேலின் கண்ணில் விரல் விட்டு ஆட்டிக்கொண்டிருக்கும் ஹமாஸ் இயக்கத் தலைவர்களில் ஒருவர். பலதடவைகள் இஸ்ரேல் வைத்த மரணப்பொறியிலிருந்து தப்பிப் பிழைத்தவர். இஸ்ரேலின் அழிக்கப்படவேண்டி நபர்களின் பட்டியலிலே முன்வரிசையில் இருப்பவர். இவரைப் பாதுகாப்பதற்கு ஈரான் அனைத்து விசேட ஏற்பாடுகளையும் செய்திருக்கும். அத்தனை தடைகளையும் தாண்டி இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.



இவரது உயிருக்கு கடும் ஆபத்துள்ளது என்பதை புரிந்து கொண்டு உச்சபட்ச பாதுகாப்பு வழங்கப்பட்ட ஒரு ஹோட்டலில் இரகசியமாக தங்கியிருந்தபோது, அவருடன் ஏனைய அறைகளில் தங்கியிருந்த எவருக்கும் எவ்வித சேதமும் இன்றி, இவரும் இவரது மெய்ப்பாதுகாவலர் ஒருவரும் மாத்திரம் துல்லியமான தாக்குதலில் ஆரவாரமின்றி நள்ளிரவில் கொல்லப்பட்டிருகிறார்கள்! எவ்வாறு இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது, யாரெல்லாம் அதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்பதற்கான தடயம் எதுவுமே இதுவரை கிடைக்கவில்லை. இதனால் இஸ்ரேலின் உளவுத்துறையின் சாகசத்தை உலகம் வியந்துகொண்டிருக்கிறது. மறுபுறத்தில் ஈரானின் உளவுத்துறை மீதான அவநம்பிக்கை வலுப்பெற்றுவருகிறது. உக்ரைன் போர் வெடித்தபோது ரஸ்யாவுக்கு ஈரான் வழங்கிய ட்ரோன்கள் உலகை வியக்க வைத்தன. அதன் பாதுகாப்பு குடைக்குள் பல மத்தியகிழக்கு நாடுகள் தமது பழைய பகையை மறந்து வரத்தொடங்கின. இஸ்மாயில் ஹனியே மீதான தாக்குதல் அந்நாடுகளை அச்சம் கொள்ளவைத்துள்ளது.



பி. ஏ. காதர்

இது இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்கும் கிடைத்த தற்காலிக - ஆனால் தேவையான - வெற்றியாகும். ஏனெனில் இவ்விரு நாடுகளும் உலக அரசியல் அரங்கிலும் இராணுவ ரீதியாகவும் தொடர்ச்சியாக சந்தித்துவரும் தோல்விகளை மறைப்பதற்கும் உலக கவனத்தை திசைதிருப்புவதற்கும் இவ்விரு நாடுகளுக்கும் இது இப்போதைக்கு உதவும். முதலில் அமெரிக்காவை விட இஸ்ரேலுக்கு இத்தாக்குதல் ஏன் முக்கியம் என்பதைப் பார்ப்போம்.

### இஸ்ரேலுக்கு ஏற்பட்டுவரும் தொடர்ச்சியான பின்னடைவுகளை மறைப்பதற்கு

கடந்த 2023 அக்டோபர் 7ம் திகதி ஹமாஸ் இஸ்ரேலில் உட்புகுந்து ஒரு மிலேச்சத்தனமான தாக்குதலை சிவிலியன்கள் மீது தொடுத்து நூற்றுக் கணக்கானவர்களை பணயக்கைதிகளாகப் பிடித்துச்சென்ற கோரச்சம்பவம் மொசாத்துக்கு விழுந்த பலத்த அடியாகும். இதனால் மொசாத் மீதிருந்த அபரிமிதமான பிம்பம் பாதிக்கப்பட்டது. இஸ்மாயில் ஹனியே மீதான தாக்குதல் அதனை சரிசெய்வதற்கு இப்போதைக்கு உதவும்.

பிரதான விடயம் இது அல்ல. அதன் பின்னர் மாதங்கள் 10 ஆனபின்னரும் - தமது இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சின்னஞ் சிறிய காசாவில் மறைத்துவைக்கப்பட்டுள்ள பணயக்கைதிகளை இதுவரை இஸ்ரேலாலும் அதன் பாதுகாவலன் அமெரிக்காவாலும் மீட்க முடியவில்லை. இதுவரை இல்லாதளவு பொது மக்கள்- சிறுவர், வயோதிபர், பெண்கள் உட்பட - சுமார் 40,000 பேர் வரை படுகொலை செய்யப்பட்டும், இதுவரை இல்லாத வான் தாக்குதல், தரைவழித் தாக்குதல் ட்றோண் தாக்குதல் மிசைல்ஸ் தாக்குதல் என எல்லாவித தக்குதல்களை தொடுத்தும், அவர்களது பல்லாயிரக்கணக்கான வதிப்பிடங்களை அழித்தொழித்து அடிப்படை வசதி எதுவுமற்ற தற்காலிக கொட்டகைகளில் வாழ்வதற்கு நிர்பந்தித்தும், உணவு, நீர், மின்சார விநியோகங்களை நிறுத்தியும் அடிக்கடி புலம்பெயரச்செய்தும், கட்டு மீறிய கைதுகள் சித்திரவதைகள் என ஆக்கிரமிப் பாளனின் கொடுங்கோலாட்சியினது அத்தனை கோர முகத்தை காட்டியும் காசா மக்களிடமிருந்து பணயக்கைதிகளும் ஹமாஸ் தலைவர்களும் இருக்குமிடத்தை இஸ்ரேலால் அறிய முடியவில்லை. இத்தனை இனஒழிப்பின் பின்னரும் இதுவரை எந்த ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியையும் இஸ்ரேல் பெறவில்லை.



இதற்கிடையில், அக்டோபர் 7ன் பின்னர் ஹமாசுக்கு எதிராகத் திரும்பியிருந்த உலக அபிப்பிராயம் இஸ்ரேல் காசாமீதும் பலஸ்தீன மக்கள் மீதும் தொடுத்த வெறியாட்டத்தினால் விரைவில் மாற்றமடைந்தது. காசாமக்கள் மீதான அனுதாபம் அதிகரித்தது. மேற்கு நாடுகள் அனைத்திலும் இஸ்ரேல் நடத்தும் இனப்படுகொலைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. ஐக்கிய நாடுகள் சபையின் தொண்டர் மீதும், பத்திரிகையாளர் மீதும் மருத்துவசாலைகள் மீதும் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான தாக்குதல்கள் பெரும் கண்டனத்துக்கு உள்ளாகின.



இதன் விளைவாகமே 2024 இல், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தலைமை வழக்கறிஞரான கரீம் அஹ்மத் கான், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றச்சாட்டின் பேரில், நெதன்யாகுவுக்கு எதிராக ஒரு கைது வாரண்டைப் பயன் படுத்துவதற்கான தனது நோக்கங்களை அறிவித் தார். அதனை அடுத்து 19.07.2024ல்

பலஸ்தீனப் பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளது என்பதை ஏற்றுக்கொண்ட சர்வதேச உயர்நீதிமன்றம் இஸ்ரேல் சர்வதேச சட்டங்களை மீறியுள்ளது என குற்றம்சாட்டியது. ஸ்பெயின் இத்தாலிகனடா, பிரித்தானியாபோன்றஇஸ்ரேலின் தோழமை நாடுகள் கூட நெதன்யாகுமீது கைது

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## வறுமையும் ... தொடர்ச்சி ...

இலங்கை இந்திய காங்கிரஸ் வேட்பாளர்கள் வெற்றி பெற்றிருந்தனர். இலங்கை இந்திய காங்கிரஸ் வேட்பாளர்கள் வெற்றிபெறாத ஏனைய மலையக மாவட்டங்களில் போட்டியிட்ட இடதுசாரி வேட்பாளர்களுக்கு இந்திய வாக்காளர்கள் வாக்களித்திருந்த நிலையில் 14 இடதுசாரி வேட்பாளர்கள் வெற்றி வாகை சூடினர்.

இத்தகைய நிலைமைகள் ஐக்கிய தேசியக் கட்சியின் கண்களை உறுத்தியது. பெருமளவான இந்தியர்கள் பிரசாவுரிமையும் வாக்குரிமையும் பெற நேர்ந்தால் தனது கட்சியின் அரசியல் வாய்ப்புகள் பாதிக்கப்படும் என்று கருதிய ஐ.தே.கட்சி கடுமையான பிரசாவுரிமை மற்றும் வாக்குரிமை சட்டங்களை நிறைவேற்றியது. பிரசாவுரிமை மற்றும் வாக்குரிமைகள் பறிக்கப்பட்ட இந்திய வம்சாவளி மக்கள் பல்வேறு துறைகளிலும் ஓரங்கட்டப்பட்ட நிலையில் இன்று வரை அதன் தாக்கம் எதிரொலிக்கின்றது.

மொழி என்பது மனிதனின் கண்டுபிடிப்புக்களில் முக்கிய இடத்தைப் பெற்று விளங்குகின்றது. இந்நிலையில் 1956 இல் கொண்டுவரப்பட்ட 'தனிச்சிங்கள சட்டம் ' நாட்டில் பல விளைவுகளுக்கும் வித்திட்டது. தனிச் சிங்களம் எனும் கொள்கை இந்த நாட்டில் பொது வாழ்க்கையில் தமிழ் மொழியை அதற்குரிய ஸ்தானத்தில் இருந்து வெறுமனே விலக்கி வைப்பதை மட்டும் கருதவில்லை. ஆனால் அது இந்த நாட்டின் தமிழ் மொழி பேசும் மக்களை இலங்கையின் அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாச்சார வாழ்க்கை என்பவற்றில் இருந்தே வெளியே தள்ளி வைக்கின்றது' என்று தமிழரசுக் கட்சியின் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் அ.அமிர்தலிங்கம் (1964) முன்னதாக தெரிவித்திருந்தார்.

இந்த வகையில் இலங்கையின் அரசகரும மொழிகளில் ஒன்றாக தமிழ் மொழி காணப்படுகின்றபோதும் மலையக மக்கள் இதன் நன்மைகளை அனுபவிப்பதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தமிழை தாய் மொழியாகக் கொண்ட இவர்களுக்கு தமிழ் மொழியிலேயே நடவடிக்கைகள் இடம்பெறுதல் வேண்டும். எனினும் அரச மற்றும் தனியார் அலுவலகங்களில் இது எந்தளவுக்கு சாத்தியமாகியுள்ளது என்பது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது.

அரச நிறுவனங்களில் இருந்து அனுப்பப்படும் கடிதங்கள், சுற்றுநிருபங்கள் உள்ளிட்ட பலவும் இன்னமும் தனிச்சிங்கள மொழியிலேயே அனுப்பப்படுவதாக தமிழ் மக்கள் விசனப்படுகின்றனர்.

கல்வி மற்றும் ஏனைய புலத்தைச் சேர்ந்த தமிழ் உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியிலேயே கருத்தரங்குகள் இடம் பெற்று வருகின்றமை குறித்தும் விசனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவையெல்லாம் மொழி ரீதியாக மலையக மக்கள் எதிர்கொள்ளும் உரிமை மீறலாக அமைந்துள்ளது. இவற்றுக்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டு மலையக மக்களின் மொழியு ரிமை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

### நிறைவேறாத வாக்குறுதிகள்

நாட்டின் தேசிய வருவாயில் கணிசமான பங்களிப்பை நல்கும் இம்மக்களுக்கு கையளவு நிலமேனும் இல்லை. பெரும்பான்மை மக்களுக்கு நிலவுரிமை பெற்றுக் கொடுக்கப்படும் நிலையில் மலையக மக்களுக்கான நிலவுரிமை மறுக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு லயத்து வாழ்க்கையில் இவர்கள் பல பாதிப்புக்களையும் எதிர்கொண்டு வருகின்றனர். வீட்டுரிமை மறுக்கப்பட்டு வரும் நிலையில் கடந்தகால மற்றும் சமகால ஆட்சியாளர்கள் வாக்குறுதிகளால் மட்டுமே இச்சமூகத்தை திருப்திப்படுத்த முனைகின்றனர். இந்நிலையில் இவர்களின் நிலவுரிமை மற்றும் வீட்டுரிமை கனவு நனவாக வேண்டும்.

அரசாங்கம் தேசிய ரீதியில் பல வேலைத் திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது. இவ்வேலைத்திட்டங்கள் மலையக மக்களை உரியவாறு வந்தடையாத நிலையில் இம்மக்கள் புறக்கணிப்புக்கு உள்ளாகின்றமையும் ஒரு உரிமை மீறலேயாகும். சுகாதார நிலைமைகளைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலம் தொட்டே இம்மக்கள் சவால்களை எதிர்கொண்டு வந்துள்ளனர்.

நீண்ட காலமாக பிரசாவுரிமை அற்றவர்களாக இருந்த இச்சமூகத்தினர், அதன் காரணமாக அரசின் ஊடாக வழங்கப்படும் சுகாதார நலன்கள் உள்ளடங்கலான அரச நலச்சேவைகள் கிடைக்கப்பெறாதவர்களாக காணப்பட்டனர். 19ம் நூற்றாண்டுகாலப்பகுதியில் இவர்கள் மத்தியில் காணப்பட்ட சமூக, பொருளாதார காரணிகளும், இவர்களுக்கெதிரான அரசியல் பாரபட்சங்களும் இவர்களது சுகாதார வாழ்க்கையில் இன்னும் அதிகமான பாதிப்புக்களைக் கொண்டு வந்தன.

முக்கியமாக தோட்டங்களில் இவர்களது உழைப்பு ஆங்கிலேய பெருந்தோட்ட செய்கையாளர்களால் அளவுக்கதிகமாக சுரண்டப்பட்டமையும், அவர்களுக்கு கிடைக்கப்பட்ட உணவு வகைகள் சுகாதார மற்றவையாகவும், போஷாக்கற்றவை யாகவும் காணப்பட்டமையும் இவர்களது உடல் நிலையில் மேலும் பல பாதிப்புக்களை கொண்டு வந்தது.

தொழில் ரீதியாக பல தொழிலாளர்கள் நெருக்கீடுகளுக்கு உள்ளாகி வரும் நிலையில் தொழிற்சட்டங்கள் செயலிழந்த போக்கினைக் கொண்டுள்ளன. இந்நிலையில் புதிய தொழிற்சட்டங்களை ஆக்கும் முனைப்புகள் இடம்பெற்று வருகின்றன. இதனிடையே புதிய தொழிற்சட்டங்களை ஆக்குவதை விடுத்து உள்ள தொழிற்சட்டங்களை முறையாக அமுல்படுத்த வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக மலையக மக்கள் உரிமை மீறல்கள் பலவற்றுக்கும் உள்ளாகி வரும் நிலையில் பெருந்தோட்ட மக்களுக்கு சகல உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம் அண்மையில் மாத்தளையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடாத்தி இருந்தது. பெருந்தொகையான மக்கள் இதில் கலந்து கொண்டனர். அரசாங்கத்துக்கும், கொள்கை வகுப்பாளர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே மேற்படி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் பொதுமக்களுக்கு விழிப்பூட்டும் வகையில் பொதுக்கூட்டமும் இடம்பெற்றது. காணியுரிமை, வீட்டுரிமை, சம்பள அதிகரிப்பு, மொழியுரிமை, அரசியல் உரிமை, பெண்களுக்கான உரிமை போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது. மலையக மக்களுக்கான உரிமைகள் பலவும் ஒடுக்கப்பட்டு அவர்களை வேரறுக்கும் இனவாதிகளின் முயற்சி தொடரும் நிலையில் இதனை தோற்கடித்து அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

• • •

## இந்திய இராணு ... தொடர்ச்சி ...

**போன்ற இந்தியத் தலைவர்களின் படங்கள் கூட நொருக்கப்பட்டு தீயிடப்பட்டு இருந்தன.**

### இந்திய இராணுவத்தினரால் வல்வெட்டித் துறையில் படுகொலை செய்யப்பட்டவர்கள்.

இந்தக் கொடுரம் சர்வதேசத்திற்கு அம்பலப்படுத்தும் நோக்கத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் சத்தியப் பிரமாண வாக்குமூலங்கள் மற்றும் புகைப்படங்களை தமிழகத்திற்கு எடுத்துச் சென்ற வல்வைப் பிரஜைகள் குழுவினர், பின்னாளில் பாதுகாப்பு அமைச்சரும், சமதாக் கட்சியின் தலைவருமான ஜோர்ஜ் பெர்னான்டஜ் அவர்களைச் சந்தித்து படுகொலைகள் தொடர்பாக விரிவான விளக்கத்தை அளித்ததும் கொதிப்படைந்த ஜோர்ஜ் பெர்னான்டஸ் அவர்கள் திரு. வல்வை.ந.அனந்தராஜ் அவர்களினால் எழுதப்பட்ட ஆங்கில நூலான "INDIA'S MYLAI" மற்றும் தமிழில் எழுதப்பட்ட "வல்வைப் படுகொலைகள்: என்ற இரு நூல்களுக்கு அணிந்துரையை எழுதக் கொடுத்துடன் அந்த இரு நூல்களும் இந்தியாவில் தமிழகத்திலும் டில்லியிலும் வைத்து வெளியிடப்பட்டதுடன் இந்தத் தாக்குதல் தொடர்பான வீடியோ விவரணச் சித்திரமும் வெளியிடப்பட்டமையும் இந்திய அரசுக்குப் பெரும் களங்கத்தை ஏற்படுத்தியது. இந்த இரு ஆவண நூல்கள் மூலமாக இப்படுகொலைச் சம்பவம் சர்வதேசத்திற்கு வெளிச்சம் போட்டுக்காட்டப்பட்டதால், இந்தியாவின் இரட்டை வேடம் அம்பலப்படுத்தப்பட்டது. இந்த நூலுக்கு பின்னாளில் வி.பி.சிங் ஆட்சியில் இந்திய பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜோர் பெர்னான்டஸ் எழுதிய அணிந்துரையில், இந்திய அரசையும்,இந்தியப் படையினரையும் கடுமையாகச் சாடியிருந்ததுடன் அதனை;த தொடர்ந்தே அவர் தமிழீழ விடுதலைப் போராட் டததின் பால் தன்னுடைய ஈடுபாட்டை அதிகரித் திருந்தார்.

அதேவேளை வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் நடத்திய படுகொலைகள் தொடர்பாக சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான முழுமையான நட்டஈடும் வழங்க வேண்டும் என்றும் வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினர் விடுத்த வேண்டுகோளையும் இந்திய அரசு தட்டிக் கழித்தது.

வல்வைப் படுகொலைகளானது எதேச்சையாகவோ அல்லது தற்செயலாகவோ நடந்த ஒரு படுகொலை அல்ல. இது பல மாதங்களுக்கு முன்னரேயே இந்திய இராணுவத்தலைமைப் பீடத்தினால் திட்டமிட்டபடியே அரங்கேற்றப்பட்டது. வல்வெட்டித்துறைப படுகொலைகள் மற்றும், ஊறணி வைத்தியசாலைக்குள் நோயாளர்களின் மீதான தாக்குதல்கள் என்பன இடம் பெறுவதற்குச் சில மாதங்களுக்கு முன்பே, இந்திய அமைதிப்படையின் பிராந்தியத் தளபதியாக இருந்த பிரிகேடியர் சங்கர் பிரசாத், வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு உறுப்பினர்களை அழைத்து, அவர்கள் முன்னிலையில் பேசும் பொழுது, "விடுதலைப் புலிகள் இந்திய இராணுவத்தைத் தாக்கினால் நான் உங்கள் கிராமங்களை எரிப்பேன். நான் நூற்றுக்கணக்கானவர்களை சுட்டுக்கொல்வேன். இராமாயணத்தில் இலங்கை எரிக்கப்பட்டது பொல போல உங்கள் கிராமங்களும் எரியும். யாரும் எங்களுக்கு எதுவும் செய்ய முடியாது. ஏனெனில் நாங்கள் உலகின் 4 வது பெரிய இராணுவமாக இருக்கின்றோம் என்பதையும் புரிந்து கெர்ளளுங்கள்..." என்று ஆணவத்துடன் குறிப்பிட்டார். அதற்கேற்றாற் போலவே பிறிகேடியர் சங்கர்பிரசாத் குறிப்பிட்டதுபோன்று வல்வெட்டித்துறையை அவரது "அனுமார் படையணியைக்" கொண்டு எரிப்பித்தார்.

தமிழில் எழுதப்பட்ட வல்வைப் படுகொலைகள், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட India's Mylai ஆகிய இரு நூல்களும் உலகமக்களின் கைகளில் கிடைத்ததும்தான், இந்தியப்படையினர் தமிழீழத்தைவிட்டு வெளியேற வேண்டுமென்ற ஒரு நிர்ப்பந்தத்தை சர்வதேசரீதியாக ஏற்படுத்தியமைக்கான காரணகளில் ஒன்றாகவும் அமைந்திருந்தது.

**தொடரும்....**

## ஈழத்தமிழர்... தொடர்ச்சி ...

யான வழிகளாலோ அல்லது வேறெந்த நேரடி வழிகளாலோ அல்லது போராட்டத்தாலோ செயல் முறைக்குக் கொண்டு வருவர்"

இந்த தேர்தல் கொள்கை 86.7 வீத தமிழர் தாயக மக்கள் வாக்களிப்பில் பங்கு பற்றி 24 தொகுதிகளில் 18 தொகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெற வைத்ததின்மூலம் ஈழத்தமிழ் மக்களின்குடியொப்ப ஆணையாக தமிழீழ அரசு என்பது இன்று வரை உள்ளது. இந்த மக்களாணையை முன்னெடுக்கும் ஈழத்தமிழர் தேசிய விடுதலைப்போராட்டம் 1978 முதல் 2009 வரை இலங்கைத் தீவு இரு அரசுக்களின் இருப்பு என்ற வரலாற்று உண்மையின் அடிப் படையில் தமிழீழத் தேசியத்தலைவராக வேலுப் பிள்ளை பிரபாகரனை கொண்ட சீருடை தாங்கிய முப்படைகளும் நிர்வாகக் கட்டமைப்புக்களும் சட்டவாக்க சட்ட அமுலாக்க முறைமைகளும் நீதிமன்றங்களும் கொண்ட நடைமுறையரசை உலகுக்கு வெளிப்படுத்தியது. 1992ம் ஆண்டு உலக தந்திரோபாய அளவை நூல் " இலங்கையில் இரு அரசுக்கள் உள்ளன அதனைக் கொழும்பு அரசு ஏற்குமா?" என்கிற கேள்வியை எழுப்பியதும் 2009ஆம் ஆண்டு: முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பு வரை பல்வேறு நிலைகளில் ஈழத் தமிழர்களின் இருப்பைத் தாக்கி அழிக்கும் இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இன அழிப்புக்கள் வழி 31 ஆண்டுகள் சிறிலங்கா தனது ஈழத்தமிழ் மக்கள் மேலான "மக்கள் மேலான போரை" நடாத்தி இறுதியில் 17.05.2009 இல் 176000 ஈழத்தமிழர்களைத் தேசமாகவே இனஅழிப்புச் செய்து தமிழீழ அரசின் அனைத்துக் கட்டுமானங்களையும் செயலிழக்க வைத்து அன்று முதல் இன்று வரை மீளவும் படைபலத்தின் மூலம் ஈழத்தமிழர்களின் அரசியல் பணிவைப் பெறும் தந்திரேபாயத்தைத் தொடர்கின்றது.

இந்த வரலாற்று உண்மையினை மறவாது அது தந்துள்ள பாடங்களின் அடிப்படையில் சனநாயக வழிகளில் ஈழத்தமிழர்களின் இறை மையை மீளுறுதி செய்யும் ஈழத்தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தை தொடர வேண்டிய பொறுப்பும் கடமையும் உள்ளவர் களாகவே தமிழர் தாயகத்து எந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளும் ஒற்றுமை யாக இல்லாவிட்டாலும் மக்களைப் பாதிக்கும் விடயங்களில் ஒருமுகப்பட்டு அரசியல் பணி யாற்ற வேண்டியவர்களாக உள்ளனர். ஆனால் அதற்குச் சிறிலங்காவின் அரசியலமைப்பு ஆறாம் திருத்தமும் சிறிலங்காவின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்;டங்களும் ஈழத்தமிழரின் அடிப்படைய மனித உரிமைகளை மறுக்கின்ற சூழலில் உலகெங்கும் அரசியல் புகலிடம் கோரியும் மறுக்கப்பட்ட கல்வி தடுக்கப்பட்ட வேலை வாய்ப்புக்களாகவும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் அந்த அந்த நாட்டின் குடிகளாகக் கூட தங்களின் பூர்விகத் தாயகத்துக்கானதும் அங்கு வாழும் தங்களின் கிட்டிய குடும்ப உறுப்பினர்கள் உறவினர்கள் நண்பர்கள் ஊரவர்களுக்காகவும் உண்மைக்கான நீதிக்கான குரலாக ஒலிக்க முடியாமலும் புனர்வாழ்வு களர் நிர்மாணப் பணிகளில் அடிப்படைய மனித உரிமைகளைப் பேணும் நிலையில் கூடச் செயற்பட இயலாமலும் 31 நாடுகளில் உள்ள ஈழத்தமிழர்களின் போராட்ட அமைப்புக்கள் செயற்பாட்டாளர்கள் மேலான பங்கரவாதிகள் என்ற சட்டங்கள் தடுக்கின்றன. இந்தச் சூழ்நிலை தாயகத்திலும் உலகிலும் ஈழத்தமிழ் மக்களின் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாடு மூலம் உலக மக்களுக்கு உண்மைகள் உணர்த்தும் செயற்பாட்டால் மட்டுமே மாற்றப்பட முடியும். இது தவிர எந்த நாடுகள் தங்கள் சந்தை மற்றும் இராணுவ நலன்களுக்காக உலகின் பாதிக்கப்பட்ட மக்கள் இனமொன்றின் தன் தாயகத்தில் வாழ்வதற்கான போராட்டத்தைப் பிரவினையென்றும் பெரும்படைகளால் நடாத் தப்படும் அழிவை தடுக்கும் ஆயுத எதிர்ப்பைப் பயங்கரவாதம் என்றும் இந்தத் தடைகளைப் போட்டு சிறிலங்காவுக்கு தங்கள் நிபந்தனையற்ற ஆதரவுகளை எல்லா நிலையிலும் வழங்கி அதனை சிங்கள இனத்தின் நாடு, பௌத்த ஆகமச் சட்டங்களை அனைவரும் ஏற்று வாழ வேண்டிய நாடு என்ற சிறிலங்கா அரசின் ஈழத்தமிழின இறைமை மறுப்புக் கொள்கைளையும் கோட்பாடுகளையும்ஊக்கப்படுத்திவருகின்றனவோ அவற்றுடனனோ அவற்றின் மேலாதிக்கங்கள் உள்ள எந்த ஒரு அனைத்துலக நிறவனங்கள் அமைப்புக்களுடனோ ஒட்டி உறவாடி ஈழத்தமிழர்களின் இறைமையை மீளுறுதி செய்ய முடியாது. ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகிலேயே மக்கள் சக்தி பெறுவதற்குத் தடையாக உள்ள அறியாமை, வறுமை என்னும் மானிடத்தின் இரண்டு பெரும் பகைமைகளுக்கு எதிரானதாகவே எப்பொழுதும் எந்தச் சூழந்நிலையிலும் எந்த அடக்குமுறை ஒடுக்குமுறைகளுக்கு இடையிலும் செயற்பாடுகள் அமைய வேண்டும். இதற்கு சமகாலத்துக்கான சமூக பொருளாதார அரசியல் ஆன்மிக அறிவுகளில் பயறி;சிகளில் வளர்ந்து கொண்டிருக்கும் இளையவர்களின் பங்களிப்புக்கு முதியவர்கள் இடமளித்து வழிகாட்லுக்கும் நெறிப்படுத்தலுக்கும் தங்கள் அனுபவங்களைப் பகிரும் பண்பாடு பரிணமிக்க வேண்டும்.

சிறிலங்கா அரசத்தலைவர் தேர்தல் மட்டு மல்ல அதன் பாராளுமன்றத் தேர்தல்களும் கூட எக்காலமும் ஈழத்தமிழர்களின் இறைமை ஒடுக் கம், தேசிய நீக்கம், பொருளாதார ஆக்கிரமிப்பு, அரசியல் பிளவுகள், ஆன்மிக மயக்கங்களை வளர்க்கின்ற தன்மை கொண்டதாகவே வரலாற்றுப் பதிவாகியுள்ளது. இதனால் ஈழத்தமிழ் அரசியல் வாதிகள் சமஸ்டி, பதின்மூன்றாவது திருத்தம், என்கின்ற புலம்பல்களை விடுத்து ஈழத்தமிழரின் வரலாற்றின் அனுபவங்களின் உண்மைகளையும் மக்களின் விருப்புக்கள் தேவைகளின் அடிப் படையிலும் தப்பிப்பிழைக்கும் வாழ்வியல் நிலையிலும் உண்மைகளும் நீதியும் நிலைக்கத் தக்க வகையில் செயலாற்ற வேண்டிய நேரமிது என்பதை அனைவருக்கும் மீள் நினைவுறுத்துவதே இச்சிறு கட்டுரையின் நோக்கு. ஈழத்தமிழர் இறைமையை முன்னிறுத்தி சனநாயக வழிகளில் வன்முறைகளற்று செயல்கள் மூலம் முயலுங்கள் முடியாதது என்று எதுவுமேயில்லை.

• • •

## அகதி என்ற ... தொடர்ச்சி ...

தொடங்க முடியாதா இன்னும் ஏக்கத்துடன் பல்வேறு நாடுகளை சார்ந்த லட்சக்கணக்கான அகதிகள் வாழ்ந்து கொண்டேதான் இருக்கிறார்கள்.

சர்வதேச அரசியலைப் பொருத்தமட்டில் அகதி மக்களின் வாழ்வியல் என்பது தற்பொழுது மிகப்பெரிய கேள்விக்குறியின் மத்தியில் உள்ளது இம்ம மக்களை பிரித்துப் பார்ப்பதும் மக்களுக்கு குடியுரிமை வழங்குவதில் மிகப்பெரிய பாராபட்சமும் சர்வதேச நாடுகள் மத்தியில் நிலவிக் கொண்டு வருகிறது இதனை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் நல ஆணையராகமும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையமும் தடுத்து நிறுத்தி இம்மக்களுக்கான உரிமைகளை நிலை நாட்ட வேண்டிய தருணம் தற்பொழுது எழுந்துள்ளது. மேலும் குடியேறிய நாடுகளில் இருந்து ஒரு சில மக்கள் தங்களுடைய தாய் நிலங்களுக்கு திரும்ப என்னும் பொழுது அதற்கான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து அவர்களுக்கென உரிய பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டியது சர்வதேச சமூகத்தின் கடமையாகும் அவையும் பல்வேறு நாடுகளில் நடப்பதில்லை.அப்படி உறுதிப்படுத்தாமல் ஆண்டுகளுக்கான ஏட்டு தரவுகளில் இத்தனை மக்களை சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பி அவர்களுக்கு மறுவாழ்வு அளித்துள்ளோம் என கூறிக் கொள்வதில் எந்த ஒரு பெருமையும் இல்லை.

மனித இனத்தின்அதிகாரவெறி ஆட்டத்தில் அப்பாவி மக்கள் இனம், மொழி நிறம் மற்றும் மதம் என பாகுபாடு இன்றி பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், அரசியல் தீர்வுகளுக்கு பலகாலங்கள் தேவைப்படலாம் ஆனால் அகதி மக்களின் இடர்களை சீர்படுத்த அவ்வளவு நேரம் தேவையில்லை. சட்டங்களை அமல்படுத்தினாலே போதும். அகதியின் குழந்தையும் அகதி என்னும் நிலை தொடராமல் இருக்கட்டும்!!

• • •

JR Print
www.jrprint.com
0208 503 6643
61, Hoe Street, Walthamstow
London E17 4SA
Email:jrprintuk@gmail.com
Fast, Relaible & Friendly Service
Guaranteed Delivery Within 72 Hours In Europe at Minimal Cost
Call For Free Guatation

## இரு நாட்டு ... தொடர்ச்சி ...

மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்திருக்கின்றார் கள். அவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுப்பவர்க ளாக யாரும் இல்லை என்பதும் சீனப் புல னாய்வாளர்களின் கண்டுபிடிப்பு. சீன அரிசி, உலர் உணவுப் பொதிகள், சீனாவிலிருந்து மீன்பிடி வலைகள், கடற்றொழிலுக்கான உபகரணங்கள் என்பவற்றுடன் சீனத் தூதுவரும், தூதரக அதிகாரிகளும் இப்போது அடிக்கடி வடபகுதிக்கு விஜயம் செய்கின்றார்கள்.

வடக்கில் சீனா கால்பதிப்பதற்கு ஏதோ ஒருவகையில் இந்தியாவின் செயற்பாடுகள்தான் காரணமாகின்றது. மீனவர் பிரச்சினை தொடரும் நிலையில், அதனைத் தமக்கு எவ்வாறு சாதக மாகப் பயன்படுத்தலாம் என்பதைத்தான் சீனாவின் புலனாய்வாளர்களும், கொள்கை வகுப்பாளர்க ளும் ஆராய்வார்கள் என்பதை புதுடில்லி புரிந்து கொள்ளாமலா இருக்கின்றது?

• • •

## ஹனியே ... தொடர்ச்சி ...

போரின் விளிம்புக்குச் சென்று மீண்டும் திரும்பி வந்தாலும் கூட, போர் ஏற்படாது என்று கூறிவிட முடியாது. ஒரு முழு அளவிலான போர் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு, தற்போதைய சூழமைவில் ஓர் இராஜீக பாதையைத் தெரிவு செய்வது அவ்வளவு இலகுவான காரியமாக இருக்கப் போவதில்லை.

மத்திய கிழக்கைப் பொறுத்தவரையில் அங்கு தற்போதைய நிலவும் அகோரத்தைக் குறைப்பதற்கான ஒரே வழி காஸாவில் ஒரு போர்நிறுத்தத்தை ஏற்படுத்துவதாகும்.

ஒரு போர் நிறுத்தத்தை ஏற்படுத்தக்கூடிய நிலையைத் தாம் அண்மித்துவிட்டதாக் அமெரிக்கா அண்மையில் கூறிவந்தது. ஏற்றுக் கொள்ளக்கூடிய போர் நிறுத்தம் எது என்பதில் இரண்டு பக்கங்களுக்குமிடையே பாரிய இடைவெளி இருப்பதால், அவ்வாறான ஒரு எதிர்வு கூறலை நம்புவது கடினமானதாகும். ஹமாசைப் பொறுத்த அளவில், போர் நிறுத்தம் என்பது ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் முற்றாக வெளியேறுவதும், எல்லாவித மான சண்டைகளையும் முடிவுக்குக் கொண்டு வருவதாகும். ஆனால் இஸ்ரேலைப் பொறுத்த அளவில் அது பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான ஒரு தற்காலிக போர் நிறுத்தமே என்றும் அதன் பின்னர் போர் மீண்டும் தொடரும் என்பதே அவர்களது புரிதலாகும்.

ஒரு போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவது அமெரிக்காவின் இராஜீக முன்னுரிமைகளில் முக்கியமானதாக இருப்பதாக அமெரிக்க இராஜீகச் செயலர் அன்ரனி பிளிங்ரன் குறிப்பிட்ட போதிலும், காஸாவில் ஒரு போர் நிறுத்தத்தை ஏற்படுத்தும் முயற்சி கானல் நீராகவே பார்க்கப்படுகிறது.

போர் நிறுத்தம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வந்த பேச்சுவார்த்தைகளில் ஹமாசின் பக்கத்தில் இஸ்மாயில் ஹனியே ஒரு முக்கிய ஆளுமையாகச் செயற்பட்டு வந்தார். தனது உதவியாளர்களின் துணையுடனும், எகிப்தின் பாதுகாப்புப் புலனாய்வுத் தலைவரின் உதவியுடனும், கட்டார் நாட்டின் பிரதம மந்திரியான ஷேக் முகமட் பின் ஜசிம் அல் தானியின் துணையுடனும், அமெரிக்காவுடனும் இஸ்ரேலுடனும் அவர் தொடர்புகளை மேற்கொண்டு வந்தார்.

“தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அரசியல் கொலைகளும், காஸாவில் தொடர்ச்சியாக அப்பாவிப் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தாக்குதல்களின் நடுவில், ஏன் மற்றப் பக்கத்தில் பேச்சுக்களை முன்னின்று மேற்கொள்பவரே கொல்லப்படும் போது, இவ்வாறான சமரசப் பேச்சுகள் எவ்வாறு வெற்றி பெறும்” என்ற கேள்வியை தனது எக்ஸ் சமூக வலைத்தளத்தில் மேற்கொண்ட பதிவில் கட்டாரின் பிரதம மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

தற்போது மேற்கொள்ளப்பட்ட கொலையைப் பார்க்கும் போது, ஹமாசை முழுமையாக வெற்றிகொள்ள வேண்டும் என்ற நெத்தன்யாகுவின் கருத்துக்கு அது பொருத்தமாக இருக்கிறது. ஆனால், மத்திய கிழக்குப் பிரதேசத்தில் ஏற்கனவே நிலவுகின்ற நிலைமையை விட மோசமானதொரு நிலைமை ஏற்படாமல் தவிர்ப்பதற்கு போர்நிறுத்தம் முக்கியமானது என்று கருதும் அமெரிக்காவின் பார்வையோடு அது இணைந்து செல்லவில்லை.

கடந்த ஒக்ரோபர் 7ம் திகதி இஸ்ரேல் மீது ஒரு மோசமான தாக்குதலை ஹமாஸ் மேற்கொள்வதற்கு நெத்தன்யாகு இழைத்த தவறுகளே காரணம் எனக் கருதுகின்ற இஸ்ரேலின் உள்ளும் புறமும் வாழும் நெத்தன்யாகுவின் எதிரிகள், தனது தவறுகளுக்கான தண்டனையிலிருந்து தப்புவதற்காகவே, நெத்தன்யாகு போரைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார் எனக் குற்றஞ் சாட்டுகின்றார்கள்.

மேலும் இஸ்ரேலுக்கும் ஹிஸ்பொல்லாவுக்கும் இடையே ஒரு எல்லைப் போர் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக அமெரிக்காவும் பிரான்சும் கடுமையான இராஜீக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்திருக்கின்றன. ஆனால் அந்த இலக்கை அடைவதற்கான மிகவும் முக்கிய முதல் படி காஸாவில் போர் நிறுத்தத்தைக் கொண்டுவருவதாகும். ஆனால் அவ்வாறான முயற்சிக்கு தற்போது பலத்த சம்மட்டி அடி கொடுக்கப்பட்டிருக்கிறது.

**நன்றி: பி.பி.சி.கொம்**

## இஸ்மாயில்... தொடர்ச்சி ...

வாரண்ட் பிறப்பிக்கப்படுமானால் அதனை நாம் அமுல்படுத்துவோம் என பகிரங்கமாக அறிவித்தன.

இதனால் இஸ்ரேல் வெகுவாக தனிமைப் பட்டது. நெதன்யாகுவின் கடும்போக்குக்கு எதிராக இஸ்ரேலுக்குள்ளேயே வரலாறு காணாத யூத மக்கள் போராட்டம் வெடித்தது, அவர் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கை வலுபெற்று வந்தது. இஸ்ரேலின் யுத்த அமைச்சரவை பிளவுபட்டது. நெதன்யாகு தனது சுயநல அரசியல் இருத்தலுக்காக இஸ்ரேலின் நலனை பலிகொடுக்கிறார் என்ற கருத்து வலுப்பெற்று வந்தது. நெதன்யாகுவின் 22-27,ஜூன் 2024 அமெரிக்க விஜயத்தின் போது அவருக்கு எதிராக -தடை களையும் மீறி - நடைபெற்ற மக்களின் ஆர்ப்பாட்டங்கள், அவற்றில் பெருமளவு யூதர்களும் கலந்து கொண்டமை, அவர் காங்கிரசில் 52 நிமிடம் உரையாற்றும் போது ஹவு ஜனநாயகக் கட்சியின் செனட்டர்களில் கிட்டத்தட்ட பாதி பேர் புறக்கணித்தமை, ஆகியவை அவர் மதிப்பிழந்த ஒருவர் என்பதைக் காட்டியது

மறுபுறத்தில் மற்றொரு அதிர்ச்சியான அரசியல் நிகழ்வொன்று நடந்தது. 2024 ஜூலை 23 சீனாவின் முயற்சியால் 14 பாலஸ்தீனிய குழுக்களிடையே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் ஒன்று சீனாவில் கைச்சாத்திடப் பட்டது.

இஸ்ரேல் தனது பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் பலஸ்தீனிய குழுக்களிடையே பிளவுகளை ஏற்படுத்துவதில் அதுவரை வெற்றி பெற்றுவந்தது. அதன் பிரித்தாளும் தந்திரோபாயம் இதனால் பெரும் பின்னடைவை சந்தித்தது. ஹமாஸ் இயக்கத்தைக்கூட பத்தா (Fatah)இயக்கத்துக்கு எதிராக நிதி - ஆயுத உதவி ஆயுதபயிற்சி வழங்கி வளர்த்துவிட்டது இஸ்ரேல் தான் என்பது இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. 19.01.2024 அன்று EU வெளியுறவுக் கொள்கைத் தலைவர் ஜோசப் பொரெல் Josep Borrell, ஸ்பெயினில் உள்ள வல்லடோலிட் (University of Valladolid in Spain) பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரையில், ஹமாஸை உருவாக்குவதற்கு இஸ்ரேல் நிதியுதவி அளித்ததாகப் பகிரங்கமாகக்கூறினார். இஸ்ரேலிய உளவுத்துறையால் ஹமாஸ் உருவாக்கப்பட்டது என்பதை தனது ஆய்வில் கண்டறிந்து நிரூபித்த ஒரு இஸ்ரேலிய பெண் பத்திரிகையாளர் கொலை செய்யப்பட்டார் என்ற விடயம் பலரும் அறிந்ததே. இவ்வாறுதான் தாலிபான்களையும் அமெரிக்கா உருவாக்கி கடைசியில் அதற் கெதிராகவே பல ஆண்டுகாலம் போராடியும் தோற்கவேண்டியிருந்தது என்பதை இங்கு நினைவு கூறலாம்.

**தொடரும்...**

## வெனிசுலாவில்... தொடர்ச்சி ...

ஏற்றுக்கொள்ளாத எதிர்க்கட்சியினர் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். எதிர்க்கட்சித் தலைவர் கொன்சலேஸ் 44 விகித வாக்குகளை பெற்றிருந்தார்.

கடந்த திங்கட்கிழமை(29) தொடக்கம் புதன்கிழமை(30) வரையிலும் இடம்பெற்ற வன்முறைகளில் 11 பேர் கொல்லப்பட்டதுடன், 750 இற்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப் பட்டிருந்தனர்.

அதன் பின்னர் தேர்தலில் வெற்றிபெற்ற அதிபருக்கு ஆதரவாக அவரின் கட்சிக்காரர்கள் நாடுமுழுவதும் ஆதரவுப்பேரணியை நடத்தியிருந்தனர்.

தேர்தலை கண்காணிக்க அனைத்துலக கண்காணிப்பாளர்கள் வருகைதந்திருந்தபோதும், தேர்தல் முடிவுகளை அமெரிக்கா தலைமையிலான நாடுகள் ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளன. இந்த தேர்தல் முறைகேடாக நடந்துள்ளதாக அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் அந்தோனி பிளிங்டன் தெரிவித்திருந்தார்.

எனினும் தேர்தலில் வெற்றிபெற்ற மடுரோவுக்கு ரஸ்யா, சீனா, கியூபா உட்பட பல நாடுகள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளன. அதாவது இந்த தேர்தல் வெற்றி தொடர்பில் உலக நாடுகள் இரண்டு பிரிவாக பிரிவடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் வெனிசுலா அதிக எண்ணைவளத்தை கொண்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு முதல் பதவியில் உள்ள மடுரோ அரசு மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்துள்ளது.

தற்போதைய தேர்தல் வன்முறைகளுக்கு பின்னால் அமெரிக்கா உள்ளதாகவும், அமெரிக்காவின் அதரவுகள் எதிர்க்கட்சிகளுக்கு உள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

## இஸ்ரேலை... தொடர்ச்சி ...

தெரிவித்துள்ளன.

இஸ்ரேலுக்கான விமான சேவைகளை பல நாடுகள் மட்டுப்படுத்தியுள்ளதுடன், இஸ்ரேலுக்கான பயணத்தை தவிர்க்குமாறு பிரான்ஸ் தமது மக்களைக் கேட்டுள்ளது.

அதேசயம், தமது இறைமையை பாதுகாக்கும் நோக்கத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் 51 ஆவது சரத்தின் அடிப்படையில் தற்பாதுகாப்பு தாக்குதலை தாம் நடத்தப்போவதாக ஈரான் ஐ.நாவுக்கு உத்தியோகபூர்வ அறிவிப்பை விடுத்துள்ளது.

## இஸ்ரேல் மேற்... தொடர்ச்சி ...

ஹமாஸ் அமைப்பும் பல தலைவர்களை இழந்துள்ளது ஆனாலும் அடுத்த தலைமுறை போராட்டத்தை வழிநடத்தவே செய்கின்றது.

இருந்தபோதும் இஸ்ரேலின் இந்த நடவடிக்கையின் பொருள் என்னவென்றால் மிகப்பெரும் போர் ஒன்று எற்படும் அபாயம் அருகில் வந்துள்ளது. ஒரு மிகப்பெரும் போரின் ஊடாகவே மத்திய கிழக்கில் அமைதி திரும்பும் வாய்ப்புக்கள் உள்ளது. ஆனால் இந்த போரில் பெருமளவான அப்பாவி மக்கள் பலியாகப்போவது தான் வருத்தமானது.

## வடக்கு கிழக்கு... தொடர்ச்சி ...

குறித்த பிரச்சார நடவடிக்கையானது தெடர்ச்சியாக 90 நாட்களுக்கு வடக்கு கிழக்கு பிரதேசங்கள் எங்கும் நடை பெறவுள்ள தாகவும், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் விஞ்ஞா பனத்தில் சமஷ்டி தீர்வு தொடர்பான விடயங்களை முன்வைப்பார்களாக இருந்தால் அவர்கள் சார்ந்து தமிழ் மக்கள் வாக்களிக்கக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் திரு. கண்டுமணி லவாகுசராசா தெரிவித்துள்ளார்.

## தாய்மொழிக்... தொடர்ச்சி ...

ஸ்பெயின் மற்றும் கத்தாலேனியாவினை எடுத்துக் கொண்டால், 12 முதல் 15 ஆம் நூற்றாண்டு வரை கத்தாலேனிய மொழிக்கென தனி இலக்கியம் இருந்தபொழுதும், ஸ்பெயினின் அதிகார ஆதிக்கத்தினால் மொழியினை இழந்திருந்தார்கள். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், கல்வி மற்றும் வாழ்வியலின் மொழி அடையாளமாக மாற புதுமைப்புரட்சி உருவானதன் விளைவு, இன்று காத்தாலேனியாவின் தனி நாட்டுக் கோரிக்கை வரையிலான உரிமைக்குரல் வரை மீண்டு வந்துள்ளதையும் நாம் கவனிக்க வேண்டும்.

போர்த்துகல் நாட்டின் கலீசியன் மொழி, 12ஆம் நூற்றாண்டின் காலம் வரை, தனக்கென தனி இலக்கியமும் மொழி நடையும் கொண்டு சீரும் சிறப்புமாக இருந்தது. ஆனால், 14ஆம் நூற்றாண்டின் காலத்தில், அரசியல் மற்றும் வரலாற்றுக் காரணங்களால் கலீசியன் மற்றும் போர்த்துக்கீசியன் என இரண்டாகப் பிரிந்தது. போர்த்துகேய நாட்டினுள் கலீசியன் மொழியும் நெப்போலியன் மன்னனுக்கு எதிரான விடுதலைப் போரிலேயே புத்தாக்கம் பெற்று, அரசியல் வடிவத்தினுள் எழுச்சிப் பெற்றது.

ஆனாலும் 19ஆம் நூற்றாண்டில் தான் இலக்கியம் புத்தாகம் பெற்றது. 1981 இல் தான் துணை அலுவல் மொழியாக கலீசியனும் நிலைத்தது. இன்றையக் கணக்கின் படி, கலீசிய மக்கள் தாய்மொழிக் கல்வி வழியிலான இருமொழிக் கல்விக் கொள்கையின் விளைவில் போர்த்துகேசிய மொழியிலும் அதன் பின் ஆங்கிலத்திலும் புலமைப் பெற்று வருகிறார்கள்.

இங்கிலாந்தினுள் இருக்கும் வேல்ஷ் மாகாணத்தின் தனித்த அடையாளத்திற்கு 1999களில் பெற்ற வேல்ஷ் மொழி கட்டாயக் கல்வி சட்டத்திற்கும் தொடர்புண்டென்பதை நாம் மறந்துவிட முடியாது.

**கூட்டாட்சி மற்றும் பன்மொழிப் பேசும் நாடுகளில் தாய்மொழிக் கல்வி:**

ஜெர்மனி மற்றும் தென் ஆப்பிரிக்கா நாடுகளின் பன்மொழிச்சூழலில் தாய்மொழிக் கல்வி என்னும் ஆய்வுக்கட்டுரையில், ”பல மொழிகள் நிரம்பிய நிலப்பரப்பில், அதிகார மையம் ஒற்றை மொழியினைக் கல்வி மொழியாக வைத்திருப்பதே ஒற்றுமைக்கான வழி என தவறாகக் கணக்கிடுகிறார்கள். பன்மொழிச் சூழலில் ஒற்றை கல்வி மொழி பிரிவினை, ஒற்றுமையின்மை, சமத்துவமின்மை ஆகியவற்றிற்கே வழிவகுக்கும்” எனக்குறிப்பிட்டு உள்ளார்கள்.

***http://www.scielo.org.za/scielo.php?script=sci_arttext&pid=S1727-37812017000100022***

ஜெர்மன் நாட்டினைப் பொறுத்தவரை அது ஒரு கூட்டாட்சி நாடு. மாநிலங்கள் அதனதன் சட்டங்களை முழுமையாக அவர்களாகவே வரையறுத்துக்கொள்ளலாம். ஜெர்மன் நாட்டில் பொதுவான கல்வி மொழியாக ஜெர்மானிய மொழி இருந்து வருகிறது. ஆனால், பிரண்டன்பர்க் மற்றும் சாசோணி மாநிலங்களில் சோர்ஃப் மொழி பேசும் இனக்குழுக்கள் வாழுகின்றனர். அவர்களின் தாய்மொழி பேசும் உரிமையினையும் தாய்மொழிக் கல்வி, கல்வியில் சோர்ப்ஃ மொழியினர் வரலாறு உள்ளிட்டவைகளை பாதுகாக்க அந்த இரு மாநிலங்களிலும் சிறப்புச் சட்டங்கள் உள்ளன.

அதேப்போல, ரோமானி மற்றும் ஃபிரிசன் மொழிகளுக்கும் தாய்மொழிக் கல்வி உரிமையினை ஜெர்மன் நாட்டின் பல மாநிலங்கள் வழங்கியுள்ளன. இந்த மொழிகள் எல்லாம் உயர்கல்வி உள்ளடங்களாக பாலியல் கல்வி வரைக்கும் அவசியமெனவும் சட்ட வரைமுறைகளில் அனுமதி வழங்கியுள்ளனர்.

அதேப்போல, சுலேசுவிக்-ஒல்ச்டைன் மாநிலத்தில் டேனீஷ் மொழியினருக்கான சிறப்புப் பள்ளிகள் இயங்கி வருகின்றன.

ஃபின்லாந்து நாட்டில் சுவீடிஷ் மொழியினருக்கான முழு அலுவல் பள்ளிகள் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## தனிவழியில்... தொடர்ச்சி ...

முடிவடைந்த பின்னர் கடந்த 15 ஆண்டுகளில் இலங்கை அரசாங்கம் எந்தவொரு அரசியல் தீர்வையும் வழங்கவில்லை. பொறுப்புக் கூறலிலிருந்து இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது என்பவற்றை இதன்மூலம் வெளிப்படுத்த முடியும்.

2012 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது தீர்மானத்திலிருந்து இன்று வரையில் முன் வைக்கப்பட்ட எந்தவொரு தீர்மானம் தொடர்பாகவும் அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. பொறுப்புக் கூறலிலிருந்து விலகி நிற்கின்றது. எனவே அந்த வெறுப்பின் காரணமாகவும், இலங்கை அரசாங்கம் எதனையும் செய்யப்போவதில்லை. சர்வதேசம்தான் பெற்றுத் தர வேண்டும் என்பதை உணர்த்துவதற்கும் பொது வேட்பாளர் நிறுத்தப்படுவாராக இருந்தால் நிச்சயமாக மக்கள் அதற்கு பெருவாரியாக வாக்களித்தால், இலங்கை அரசுக்கு சர்வதேச அரங்கில் அது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

**முதலாவது வாக்கை தமிழ்ப் பொதுவாக்காளருக்கும், இரண்டாவது வாக்கை மற்றொருவருக்கும் வழங்கலாம் என்று சிலர் சொல்கின்றார்கள். அது இவ்விடயத்தில் பாதிப்பை ஏற்படுத்துமா?**

நிச்சயமாகப் பாதிப்பை ஏற்படுத்தும். விருப்பும் வேட்பாளருக்கு இரண்டாவது வாக்கை அளிக்கலாம் என்றால், தமிழ்ப் பொது வேட்பாளர் அவசியமில்லை. மக்கள் நேரடியாகவே அவருக்கு வாக்களித்துவிட்டுப் போய்விடுவார்கள். தமிழ்ப் பொது வேட்பாளர் என்பவர் தனித்துவமானவராக இருக்க வேண்டும். கடந்த காலங்களில் சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களித்து எதுவும் நடைபெறவில்லை. இனப் பிரச்சினையை பத்தோடு பதினொன்றாகத்தான் அவர்கள் பார்க்கின்றார்கள்.

இப்போது சர்வதேசம் கூட இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை எனக் காட்ட முற்படுகின்றது. பொருளாதாரப் பிரசினைதான் இருக்கின்றது. ஊழல் மோசடிகள் அதிகரித்துள்ளன. இவற்றுக்குத் தீர்வைக் கண்டால் அனைத்தும் சரியாகிவிடும் என்ற எண்ணப் போக்குதான் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளிடமும் காணப்படுகின்றது.

ஒற்றையாட்சிக்குள் தீர்வைக்காணமுடியாது. ஜனாதிபதியாகவும் வரமுடியாது. ஆனால், இத்தேர்தலில் போட்டியிட்டு ஒருங்கிணைந்த எமது பலத்தைக் காட்டமுடியும். தமிழ்த் தேசிய அரசியலின் ஒட்டுமொத்த உணர்வை வெளிப்படுத்த முடியும். அதற்கு ஏற்றதாக இவர்கள் பொது வேட்பாளரைக் கொண்டுவர வேண்டும்.

பொது வேட்பாளருக்கு வாக்களித்துவிட்டு விருப்பு வாக்கைச் செலுத்துங்கள் என்றால், அது இலங்கையின் ஒற்றை ஆட்சி முறையை ஏற்றுக்கொண்டதாகிவிடும்.

• • •

## ஈழமக்களின்... தொடர்ச்சி ...

எதிரானதாகவே காணப்படுகின்றன.இதனை யாரும் அவ்வளவு சீக்கிரமாக மறந்துவிடவில்லை. தமிழர்கள் இக்கட்சியின் மீது எவ்விதமான நம்பிக்கையும் இல்லாதவர்களாக காணப்படுகின்றனர்.இதனிடையே யாருக்கு வாக்களித்தும் எவ்விதமான பயன்களும் ஏற்படப்போவதில்லை என்ற எண்ணம் தமிழ் மக்களின் ஆழ்மனதில் ஊறிப்போய் இருக்கின்றது.இந்த நிலையில் ஈழத்தமிழர்கள் ஒரு திரிசங்கு சொர்க்க நிலையில்தான் இருக்கின்றார்கள்.இதனிடையே பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கும் முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த முயற்சியை நானும் வரவேற்கின் றேன். பொதுவேட்பாளர் எல்லோருக்கும் பொருத்தமானவராக வந்தால் மிகவும் நல்லது. எங்களின் கொள்கை இதுதான் என்பதை எல்லா மட்டங்களிலும் அடையாளப்படுத்துவதற்கு பொது வேட்பாளர் ஒருவரை அறிமுகப்படுத்துவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்றே கருதுகின்றேன்.கொரோனா போன்ற இடர் காலங்களின்போது சமத்துவம், தமிழர்களின் உரிமைகள் தொடர்பாக அதிகமாக பேசப்பட்டது. எனினும் இதன் பின்னர் பழைய நிலையிலேயே நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமை கசப்பான உண்மையாகும்.இனவாத சிந்தனை என்பது இலங்கையின் ஆட்சியாளர்களிடம் தொடர்ந்தும் இருந்து கொண்டே இருக்கின்றது. இரத்தத்தில் ஊறிப்போனதாக இந்த விடயம் ஆகி இருக்கின்றது.இந்த நிலையில் எந்த ஒரு வேட்பாளரை யாம் ஈழத்தமிழ் மக்கள் நம்பக்கூடிய நிலையில் இல்லை.

மலையக மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கென்று தனி விருப்பு, வெறுப்புகள் காணப்படுகின்றன.அவர்களின் பிரச்சினைகள் ஏனைய சமூகத்தினரின் பிரச்சினைகளில் இருந்தும் வேறுபட்டவையாகக் காணப்படுகின்றன. அடிப்படை தேவைகள் கூட நிறைவு செய்யப்படாத நிலையில் அம்மக்கள் அதற்காக போராடி வருவதும் தெரிந்த தேயாகும். அம்மக்களிடையே பல்வேறு கருத்து வெளிப்பாடுகள் எதிர்பார்ப்புகள் காணப்படுகின்றன. இந்நிலையில் அவர்கள் தமக்கு யார் உண்மையாக சேவையாற்றுவார்கள்? மலையக மக்களின் உரிமைகளுக்கு யார் உத்தரவாதம் தருவார்கள்? என்பதை விளங்கிக் கொண்டு வாக்களிக்க வேண்டியது அவசியமாகும்.

## மலேசியா... தொடர்ச்சி ...

புகைப்படத்தை மீண்டும் பதிவேற்றியுள்ளது. முகநூலின் இந்த செயல் மிகவும் கோழைத் தளமானது என மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹீம் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன மக்களின் போராட்டத்திற்கு மலேசியா தொடர்ந்து தனது ஆதரவுகளை வழங்கிவருகின்றது. இஸ்ரேலின் தாக்குதல்களை மலேசியா தொடர்ந்து கண்டித்தும் வருகின்றது.

கனியா படுகொலை செய்யப்பட்ட பின்னர் தனக்கும் கனியாவுக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடலை மலேசிய அதிபர் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட முகநூல் தளத்தில் பதிவிட்டிருந்தார். அதனையும் முகநூல் நீக்கியிருந்தது. இன்ஸ்ரேகிராம் கணக்கில் பதிவிடப்பட்ட படங்களும் அகற்றப்பட்டுள்ளது.

கட்டாரில் கனியாவுடன் அன்வர் சந்திப்பை மேற்கொண்டிருந்தார். இரு தரப்புக்கும் இடையில் அரசியல் ரீதியான உறவுகள் வளர்ந்திருந்தன.

முகநூல் நிறுவனத்தின் இந்த நடவடிக்கை தொடர்பில் தாம் விளக்கம் கோரியுள்ளதாக மலேசியாவின் தொலைதொடர்பு அமைச்சர் பகுமி பட்சில் தெரிவித்துள்ளார்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்

## ஆனாலும் இது தமிழர் தாயகம் தான் ...












